507

உ
திருச்சிற்றம்பலம்

அம்மைபாதி அப்பன்பாதி அந்தாதி

திருவாசகமணி

*

விஜய ஆண்டு

1st April
1954

விலை அணா
8.

0-,12 NBS4, A
N54
103700

உ

திருச்சிற்றம்பலம்

அம்மைபாதி அப்பன்பாதி அந்தாதி

திருவாசகமணி

கே. எம். பாலசுப்பிரமணியம்

இந்நூல்,

ஆசிரியரால் வெளியிடப்பெற்றது

★

விஜய, பங்குனி, 19.

பதிப்புரிமை] 1954 [விலை அணா 8

திருச்சினுப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி.

தோற்றுவாய்

அம்மை பாதி அப்பன் பாதி அந்தாதி என்ற இந்நூலின் தலைப்பைக் காண்போரது உள்ளத்தில் இரண்டுவித எண்ணங்கள் எழுதல் இயல்பே. நக்கீரதேவ நாயனார் அருளிச்செய்த கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி என்ற அரிய நூலின் நாமத்தையும் போக்கையும் பின்பற்றி எழுந்ததோர் நூலாகும் இது என்பது முதல் எண்ணம். இந்நூலின் பாட்டுடைத் தலைவர்கள் அம்மையாகிய இமயவல்லியும் அப்பனாகிய கண்ணுதற் கடவுளும் ஆக இருப்பர் என்பது இரண்டாவது எண்ணம். ஆனால் இவற்றுள் முதல் கருத்து எவ்வளவு சரியோ அவ்வளவு தவறானதாகும் இரண்டாவது கருத்து. ஏனெனில், பொதுவாகவும் இயல்பாகவும் யாம் அம்மையப்பர் என்று அழைக்கும் உமாமகேசுரரைப் பற்றியது ஒன்று அன்று இந்நூல். பேய்வடிவில் வந்து கண்ட காரைக்கால் அம்மையை, "அம்மையே என்னும் செம்மை ஒருமொழியால்" அழைத்து உலகெலாம் உய்யவே அருளிச் செய்தார் கயிலைமா மலையிற் கண்ணுதல் என்பது சேக்கிழார் பெருமானின் வாக்கு. அதேபோல, "நில்லுகண்ணப்ப நில்லு கண்ணப்ப என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப" என்று காளத்தியீசன் திண்ணனாரை யழைத்தார் என்பது நக்கீரதேவரின் கூற்று. ஆக, எம்பெருமானாகிய இறைவனாலேயே 'அம்மை' என்று அழைக்கப் பெற்ற அலகிலாப் பெருமை நம் காரைக்கால் தேவிக்கும், 'அப்ப' என்று அழைக்கப்பட்ட சிறப்பு நமது கானவர்க்கரிய சிங்கமாகிய கண்ணப்பருக்கும் உண்டானமை உலக சரித்திரத்திலேயே அருமையானதொரு வரலாற்றுச் சிகரமாகும். எண்ணிறந்த கோடிச் சீவர்களுக்கும் எல்லையில்லாத பல உலகங்கட்கும் அம்மையப்பராக விளங்குகிறார் சிவபெருமான். அவரைத் தாயுமிலி தந்தையிலி என்றும்,

> "எந்தையாய் எம்பிரான் மற்றியாவர்க்கும்
> தந்தைதாய் தம்பிரான் தனக்கஃதிலான்"

என்றும் நமது வாதவூரடிகள் வருணித்துள்ளார். எனினும், அந்தப் பரமனும் கூட அம்மையே என்றும் அப்பா என்றும் யாரையாவது தாம்அழைக்க நீண்டகாலமாகத் துடித்துக்கொண்டிருந்தனர்போலும். ஆதலால்தான் அன்று தம்பால்வந்து, பால் நினைந்தூட்டும் தாயினுஞ் சாலப் பரிந்து கருணைகாட்டக்கூடிய புனிதவதியாகிய பெண் அடியாரை 'அம்மே' என்றும், திண்ணனாராகிய ஆண் அடியாரை 'அப்பா' என்றும் பத்திவலையிற் படுவோராகிய பரமேசுவரன் வாய் நிறைந்த வளச்சொற்களால் முறையே அழைத்தார். இந்த வரலாற்று நயத்தை நினைந்தேதான் அம்மை பாதி அப்பன் பாதி என்ற சொற்

ஞெடர்களே முறையே காரைக்கால் அம்மைக்கும் கண்ணப்ப நாய னருக்கும் இச்சிறு நூலில் யான் உரிமையாக்கத் துணிந்தேன்.

கண்ணுதற்பெருங்கடவுளுக்கே ஒரு கண்ணை வழங்கிய இணையற்ற பெருமை உலக மக்களுள் திண்ணனாரைத் தவிர வேறு யாருக்கும் கிடைக்கப்பெற்றிலது. பெரியபுராணத்தின் வரலாற்றின்கண் முத லிலே புண்பட்ட இறைவனது கண்ணிற்குப் பதிலாகத் திண்ணனார் தமது கண் ஒன்றினை அகழ்ந்தெடுத்து வைத்ததாகச் சொல்லப்பட் டுளது. ஆனால், மானக்கஞ்சாறர் திருமகளாரது கூந்தலும், சிறுத் தொண்டரது செல்வக் குமாரராகிய சீராளரும் திரும்பப் பெறப்பட்ட தைப்போன்று கண்ணப்பர் இறைவனுக்களித்த ஒரு கண் மீண்டும் திருப்பியளிக்கப்பட்டுவிட்டது என்ற குறிப்பே யாண்டும் இல்லாமை ஈண்டு கருதற்பாலதாகும். எனவே, பெரியபுராணத்தின் வரலாற்றின் படி, இன்றும் திருக்காளத்தியப்பரின் திருநேத்திரங்களில் ஒரு நேத்தி ரம் கண்ணப்பருடையது அன்றோ? இத்தகைய பெருமையினை உணர்ந்துதான் போலும் காளத்தியப்பர் திண்ணனாரை நோக்கி "நில்லு கண்ணப்ப" என்று மும்முறை அழைத்தார். எனவே, கண் ணப்ப என்பது கைம்மாறாக இறைவனால் திண்ணனாருக்கு வழங்கப் பெற்ற காரணப்பெயர். தமது திருவடிகளில் வீழ்ந்து நமஸ்கரித்த பெருந்தகைமைக் கடலாகிய நாவுக்கரசர் பெருமானுக்கு வேறு எவ் விதத்திலும் நன்றி செலுத்த இயலாது தவித்த காழி வள்ளலார் அவரைத் தமது பங்கயத்தின் செவ்வி பழித்து வனப்போங்கும் செங் கமலத் திருக்கரத்தால் அன்பொழுகத் தூக்கி எடுத்து, "அப்பரே" (என் தந்தையே!) என்று அழைத்த அருமை நயத்தையும் ஈண்டு ஒப்பு நோக்குக. எனவே, கண்ணப்ப என்ற சொல் கண்போன்ற அப்பனே என்னும் உவமைத் தொகையாக வேனும், அல்லது கண்ணா கிய அப்பனே என்னும் பண்புத் தொகையாகவேனும் கொள்ளற் பாலதாகும். ஆகவே, கண்ணுதலார் திண்ணனாரை 'அப்ப' என்று அழைத்த அருமை இனிது புலப்படுகிறதன்றோ?

1953-வது ஆண்டில் திருவருள் துணைகொண்டு அடியேனால் யாக்கப்பெற்ற ஈங்கோய்மலை அந்தாதி என்னும் நூலானது அச்சாகி வந்து கொண்டிருந்த தருணத்தில்தான் இந்த அம்மை பாதி அப்பன் பாதி அந்தாதி என்ற சிறுநூல் உற்பத்தியாகியது. காரைக்காலம்மை யும் கண்ணப்பரும் எப்போதுமே என் மனக்கினிய மகிபர்கள்; என் "உள்ளம் கவர்ந்த கள்வர்கள்;" என் வாழ்க்கை நோய்க்கு மருந்து; என் நாவில் இனிக்கும் நல்லமுதம்; என் கண்கள் களிக்கும் கவி னுருவர். அவர்களது நிறைபுகழ் பாடி எம்இறையருள் பெறு தற்கு என் நெஞ்சம் நீண்டகாலமாகவே விழைவுற்று நின்றது. எனவே, 8—8—53 அன்று இரவு சுமார் பத்து மணிக்கு, வேண்டு வார் வேண்டுவதே ஈவானது தூண்டுகோலாம் திருவருள் துணை

செய்ய, இந்நூல் எதிர்பாராதவண்ணம் உருவெடுக்கலாயிற்று. ஆக, 8—8—53, 9—8—53, 10—8—53 ஆகிய மூன்று தினங்களில் இந் நூல் எழுதி முடிக்கப்பெற்றது. ஆனால், அருளாதாரமும் பொருளா தாரமும் ஒரே இடத்திலும் ஒரே காலத்திலும் முகிழ்த்து நிற்றல் என்பது எங்ஙனும் அரிதாதல் போலவே அடியேன்பாலும் சின்னாள் அரிதாயிற்று. எனினும், இந்நூல் வெளியிடப்பெறுதற்கு யான் வெகு நாட்கள் காத்திருக்கவில்லை. வேண்டத்தக்கது அறிவோனும் வேண்ட முழுதும் தருவோனும், தமிழ் விரும்பும் தயாபரனும் ஆகிய சிவ பிரான் நமது அம்மை அப்பன் புகழ்பாடும் இந்நூலை வெகு விரைவில் வெளியிடுவதற்கு உதவிபுரிந்துவிட்டார்.

எனது கெழுதகை நண்பர் உயர்திரு. என். பி. நஞ்சப்பா அவர்கள் இந்நூல் வெளியீட்டின் புனித கைங்கரியப் புண்ணியத்தை ஏற்றுக் கொள்ளக் கண்ணியத்துடன் முன்வந்தமை இறைவனது திருவருளின் அலகிலா விளையாடல்களில் ஒன்றும். அவர்களது அன்பார்ந்த அழைப்பின்பேரில் யான் ஒரு சொற்பொழிவாற்ற அவர்கள் ஊருக்குச் சென்றிருந்தபோது இந்நூல் விஷயத்தை வெளியிட்டேன். அவர்கள் யாதொரு யோசனையுமின்றி, அகங்கனிந்து முகமலர்ந்து அன்புரை களால் தாமே இந்நூலின் வெளியீட்டுச் செலவை ஏற்றுக்கொள்ளுவ தாக விடையளித்தார்.

> " இரத்தலும் ஈதலேபோலும் கரத்தல்
> கனவிலும் தேற்றாதார் மாட்டு "

என்ற குறள் வெண்பாவை இச் " சிறிய பெருந்தகையார் " தமது அருஞ்செயலால் அடியேற்கு நினைவூட்டினார். உயர்திரு. என் பி. நஞ் சப்பா அவர்கள் நலந்தரு சைவம் காத்த குலந்தரு பெருமைசான்ற நற்குடியில் பிறந்ததோர் நல்லுணர்வின் வல்லுநர். கொங்குநாட்டின் கோபிசெட்டிபாளையத் தருகில் உள்ள பாரியூர் நஞ்சக்கவுண்டன் பாளையம் என்னும் சிற்றூரின் பெருந்தனத்தார்களாகிய வேளாளர் மரபில் தோன்றிய திரு. ரா. பழநிக் கவுண்டர் அவர்களது திருப் புதல்வர் இருவர். அவர்களுள் மூத்தவர் பெயர் திரு. என். பி. ராமா னுந்தக் கவுண்டர் அவர்கள். இளையவர்தாம் நமது என். பி. நஞ்சப்பா அவர்கள். இவர்கள் இருவருமே பெருங்குடிப் பிறப்பின் அருங்குணச் சிறப்பின் பிரதிநிதிகள் ஆவர். காலஞ்சென்ற தமது தந்தையாரின் அன்னதானம், பொருள்தானம், கல்விதானம் முதலிய அருந் தொண்டுகளாகிய அறச்செயல்களை இவ்விரு சகோதரர்களும் ஏக மனதாக இடைவிடாது இன்றும் என்றும் நடாத்தி வந்து எல்லையில் தவப்பயன் எய்தி வருகின்றனர். நாம பஜனையும், நாள்வழிபாடும், ஆண்டு விழாக்களும் இவர்கள் அன்றுமுதல் இன்றுவரை அன்புடன் நடாத்தி அழியாப் புகழ்நாட்டி வருகின்றனர். இவர்கள் குடும்பம் முழுவதுமே இத்தகைய இறை பணிகள் இயற்றி இன்பத் தொண்டு

ஆற்றி அருமையில் எளிய அழகாய்த் திகழ்வதற்கு மூல காரணம், இவர்களது குலகுருவாகிய ஸ்ரீ-ல-ஸ்ரீ ராமானந்த சுவாமிகள் அவர்களே. சீலமும் தவமும் செறிந்து விளங்கி ஞாலமும் விண்ணும் நாளும் பணியக் கோலமும் குணமும் குறைவிலா நிறைவாய்க் காட்சியளித்துச் சார்ந்தாரை உய்விக்கும் தேர்ந்தோராம் தவமுனிவர் அப்பெரியோர். அவர்களது இருப்பிடம் பாலக்காட்டைச் சார்ந்த மன்னூர் என்னும் சிற்றூர்.

இவ்வாறு, இயற்கையாகவே நிறைந்த பிறப்பின் ஏற்றமும் செயற்கையாக வாய்த்த சிறப்பின் செறிவும் ஒருங்கே அமைந்து வாழ்க்கை வளத்தின் வனப்பினில் கொழிக்கும் எம் நண்பர் திரு. நஞ்சப்பா அவர்கள், வயதில் வாலிபர்; அழகினில் செவ்வேள்; பொறையில் பூமி; அடக்கத்தின் உதாரணம்; ஒழுக்கத்தில் உத்தமர்; உள்ளத்தில் தூய்மையர்; மொழியில் இனிமையர்; செய்கையில் சீலர். பொருட் செல்வத்தைத் தாம் கொண்டதெல்லாம் அருட் செல்வத்தை வளர்ப்பதற்கே என்று கருதி அவ்வாறே தமது வாழ்க்கையை வளம்பட நடாத்தும் நல்லோருள் திரு. நஞ்சப்பா அவர்கள் தலையாயவர். "அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியாய் பொன்னம்பலத்தெம் முடியா முதலே" என்று சதா இறைவனை வேண்டும் இனியவர் இவர். கண்டவுடன் பிறர் உள்ளத்தைக் கவரக்கூடிய கனிந்த நோக்கும் தணிந்த மொழியும் பணிந்த நடையும் இயற்கையாகவே அமையப்பெற்ற இக் குலமகனர் கொண்டுள்ள பணிவும் குறைவற்றதோர் செல்வமன்றோ?

> "எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவருள்ளும்
> செல்வர்க்கே செல்வம் தகைத்து"

என்ற குறளுக்கு இவரினும் உயர்ந்த எடுத்துக்காட்டு வேறு எவரிடம் காண்டற்கியலும்? இந்நூலை இவர் அச்சேற்றி வெளியிட மனமுவந்து முன்வந்தமைக்காக மட்டும் யான் இவரைப்பற்றி ஈண்டு எழுதத் துணிந்திலன். "நல்லாரைக் காண்பதுவும் நன்றே......... நல்லார் குணங்களுரைப்பதுவும் நன்றே" என்ற கருத்தையொட்டியும் இவர் போன்ற அன்பர்களைப் புகழ்வதே இன்பம் தரும் தொண்டாகும் என்ற உண்மையைப் பின்பற்றியும்தான் இவண் திரு. நஞ்சப்பா அவர்களைப்பற்றி இவ்வளவும் எழுதினேன். அவர்களது காலத்தாற் செய்த உதவி ஞாலத்தின் மாணப்பெரிது. ஏனெனின் இது ஒரு சிவ கைங்கரியம்; இதன் பயன் சிவபுண்ணியம். எனவே, இவரும் இவரது சகோதரரும் இவர்களது குடும்பத்தாரும் பண்பும், அன்பும், இன்பும் பெருகப் பல்லாண்டு பல்லாண்டு வாழிய என நல்லாண்டவனுகிய சிவபெருமானை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

சிலநாட்களுக்கு முன்பு காரைக்காலைச் சேர்ந்த தமிழ் அன்பர் ஒருவரைச் சந்தித்து அளவளாவும் பேறு அடியேற்குக் கிட்டியது.

அவர்தாம் உயர்திரு. **காராவேலன்** என்னும் தமிழ் அறிஞர். அவர்களது பிரஞ்சு நாமம் Leon Saint Jean. அவர்கள் தலைசிறந்ததொரு வழக்கறிஞர். பிரஞ்சு மொழியிலும் தமிழ் மொழியிலும் பேராற்றல் படைத்துள்ளதோடு, பிரஞ்சு பாஷையில் பல கவிகளை இயற்றியுள்ளார்கள். திரு. காராவேலன் அவர்கள் ரோமன் கத்தோலிக்கக் கிறிஸ்துவ சமயத்தினர். எனினும் அவர்களுடைய தமிழ்க் காதல் சமயாதீதப் பிரேமையாகவே மாறியுள்ளமை யாவராலும் மிகமிகப் பாராட்டத்தக்க தொன்றாகும். 1933–வது ஆண்டிலேயே அவர்கள் பிரான்சு தேசம் சென்றபோது பாரிஸ் நகரத்திலே பல பிரஞ்சு அறிஞர்கள் கூடிய சபையில் நம் சைவ அடியார்களது நூல்கள் சிலவற்றின் பிரஞ்சு மொழிபெயர்ப்புப் பாடல்களைப் பாடிக்காட்டிப் பாராட்டும் பெற்றுள்ளார்கள். 29—10—33 தேதியிட்ட Chicago Sunday Tribune என்ற அமெரிக்கப் பத்திரிகை இவரது இச் சொற்பொழிவினைப் பற்றிக் குறிப்பாகப் புகழ்ந்துள்ளது. அவர் தமிழினிருந்து பிரஞ்சில் மொழிபெயர்த்துள்ள நூல்களுள் காரைக்கால் அம்மையார் இயற்றியுள்ள **திருவாலங்காடு மூத்ததிருப்பதிகம்** என்ற நூலும் ஒன்றாகும். யான் அவர்களைத் திருச்சிராப்பள்ளியில் சந்தித்த காலை அவர்கள் இவ்விவரங்களை யெல்லாம் எடுத்துக்கூறி என்னை ஆனந்தக் கடலில் ஆழ்த்திவிட்டார்கள். பிறந்து மொழி பயின்ற பின்னெல்லாம் இறைவனை மறந்துவிடாத பெருமையுடைய நமது அம்மையார் பிறந்து பிறங்கிய பேரருள் தலமாகிய காரைக்காலிலே பிறந்து சிறந்த திரு. காராவேலன் அவர்களும் பிரஞ்சு மொழி பயின்றபின்னெல்லாம் நமது அருட்கவிஞர் நூல்களைப் பிறங்க மொழிபெயர்த்துப் பெருந்தொண்டு செய்துவருதல் எத்துணைப் பெருமையுடைத்து! அவர்களது தமிழ்க் காதல் இத்துடன் நில்லாமல் டாக்டர் ஜி. யூ. போப் அவர்கள் திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்ததைப்போல அவர்களும் அத்தெய்வீக நூலைப் பிரஞ்சு மொழியில் பெயர்த்து எழுதத் தூண்டியுளது. அடியேனது திருவாசக (ஆங்கில) மொழியெர்ப்பையும் கேட்டுள்ளார். எனவே, அப்பெரியாரது அருள்செறிந்த முயற்சிகள் நம்மால் பெரிதும் பாராட்டுதற்குரியன. அவர்களது பிரஞ்சு மொழிபெயர்ப்பு (**திருவாலங்காடு மூத்ததிருப்பதிகம்**) இந்நூலின் இறுதியில் அணிசெய்து திகழ்கின்றது. திரு. காராவேலன் அவர்கள் நீண்ட ஆயுளுடனும் நிறைந்த செல்வத்துடனும் நீடூழிவாழ்ந்து இத்தகைய பிரஞ்சு மொழி பெயர்ப்புகள் பலவற்றை இயற்றி, "ஞாலம் இறைபுகழே மிக வேண்டும்" என்னும் லக்ஷியத்தை வெற்றியுடன் நிறைவேற்றுவாராக என மனமார வாழ்த்துகிறேன். அவர்களது எல்லா முயற்சிகளும் இனிது வெற்றியடைக! நல்லார் செறிந்த அவர்களது நகரமாகிய காரைக்கால் நாளும் செழித்து நலம்பெற்று வாழ்க, வாழ்க என வாழ்த்துகிறேன்.

உயர்திரு. பி. ஸ்ரீ. ஆச்சார்யா அவர்கள் மனிதருள் தலையாய மனிதருள் ஒருவர். பரந்த கல்வியும், ஆழ்ந்த அறிவும், சிறந்த பண்பும் ஆகிய நற்குணங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப்பெற்ற அருமையான கலைவல்லவருள் மிகச் சிறந்த இப்பெரியோரை யான் இப்பிறப்பில் கண்டு, இவர்களுடன் அளவளாவி இவர்களது ஆசியையும் பெறுவதற்குக் காரணம் எனது முற்பிறப்பின் தவமே என்பது என் நம்பிக்கை. கம்பராமாயணக் கடலினைக் கடைந்து அதனின்றும் திரண்டுவரும் அமுதத்தை, ஈரத்தமிழ் விரும்பும் எமது செங்கண் நெடுமாலெனவே இவர்களும் சாரத்தமிழ் என்னும் தங்கக் கிண்ணத்தில் எடுத்து உலகுக்கெல்லாம் வழங்கிவரும் பெருமையுடையவராய் இருந்து வருகிறார்கள். அவ்வாறு இவர்கள் பெருங்கடலைக் கடைந்து வரும் கால் எனது சிற்றோடைத் தமிழையும் சற்றேனும் கவனிக்க முன்வந்த பேருதவிக்கு யான் என்ன கைம்மாறு செய்யவல்லேன்? அவர்களது கருத்துச் செல்வமும் கவின்பெறு 'ஜீவனும்' மிகுந்த அணிந்துரை ஒன்று இந்நூலினை அணிசெய்து நிற்க, 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்று நான் இறுமாந்து மகிழ்வதோடு திரு. பி. ஸ்ரீ. அவர்களுக்கும் என் உளம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இந்நூலினைக் கண்ணுற்று மனமுவந்து சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ள தமிழ்ப் பெரியோர்களும் எனது கெழுதகை நண்பர்களும் ஆகிய உயர்திருவாளர்கள் கவியோகி சுத்தானந்த பாரதியார், கவிமணி தேசிகவினாயகம் பிள்ளை, வரகவி. அ. சுப்ரமணிய பாரதியார், புலவரேறு அ. வரதநஞ்சைய பிள்ளை, எஸ். இராமச்சந்திரப் பத்தர், வல்லை பாலசுப்ரமண்யம், திருலோகசீதா ராம் முதலியவர்க்கு யான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூற் பிரதியைக் கண்ணுற்றும் இது அச்சாகும்கால் ஒப்பு நோக்கியும், வேண்டிய இடங்களில் திருத்தங்கள் செய்து உதவியும் துணைசெய்த என் நண்பர்கள் வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்களுக்கும், வித்துவான் இராமமூர்த்தி ஐயர் அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

திருச்சி யுனைடெட் பிரிண்டர்ஸ் அச்சு நிலையத்தின் பொறுப்பாளரான நிர்வாகிகள், திருவாளர்கள் டி. சிவப்பிரகாசம் பிள்ளை, டி. சிவஞானம் ஆகிய இருவரும் கருணைகூர்ந்து விரைவாகவும் அழகாகவும் இந்நூலை அச்சிட்டு உதவிய நன்றி உண்மையிலேயே கடலிற் பெரிதாகும்.

காரைக்கால் அம்மை வாழி !
வாழிய கண்ணப்ப வள்ளல் !!

திருச்சி
1—4—54

திருவாசகமணி

அணிந்துரை

'அந்தாதி' என்றதும் பழைய தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்று என்றல்லவா இப்போது நினைக்கிறோம்? 'விருந்தேதானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' என்ற தொல்காப்பியச் சூத்திர உரையில், 'புதிதாகத் தாம் வேண்டியவாற்றால் பல செய்யுளும் தொடர்ந்துவரத் தொடுத்துச் செய்யப்படும் தொடர்நிலை' யாகிய விருந்திற்கு ஓர் உதாரணமாகப் 'பொய்கையார் முதலாயினோர் செய்த அந்தாதிச் செய்யு'ளையும் காட்டுவர். சங்ககாலத்தில் இல்லாமல் பிற்காலத்தில் ஒரு விருந்தாகத் தோன்றியது அந்தாதிச் செய்யுள் என்பது தெளிவு.

இந்தப் புதிய அந்தாதியும் இன்றைய தமிழுலகத்திற்கு ஒரு புது விருந்து. நக்கீரதேவ நாயனாரின், 'கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி' என்னும் பிரபந்தத்தை நினைவூட்டும் இந்நூல், உலக அன்னையாகிய தேவியின் சிறப்பையும் இறைவனின் பெருமையையும் பேசுகிறதோ என்றுதான் முதற்கண் எண்ணமிட்டேன். பிறகு,

அங்கணன் 'அம்மையே!' என்(று)
அருள்செய, 'அப்பா!' என்று
பங்கயச் செம்பொற் பாதம்
பணிந்துவீழ்ந் தெழுந்தார்...

என்ற அழகிய பெரியபுராண அடிகள் நினைவிற்கு வந்தன. உடனே, இந்நூல் அம்மையாரின் பக்திச் சிறப்பையும், இறைவனது அருட்சிறப்பையும் பாடுகிறதோ என்று எண்ணமிடலானேன். ஆனால், இந்த அந்தாதியில் 'அப்பன்' கண்ணப்பன்தான்.

'நில்லுகண்ணப்ப! நில்லுகண்ணப்ப!என்
அன்புடைத்தோன்றல்!, நில்லுகண்ணப்ப' என்(று)

இறைவன் கூறியதாக வரும், 'திருக்கண்ணப்பதேவர் திருமற'த்திலே 'கண்ணப்பர் ''அப்பா'' என்று அழைக்கப்பட்டமை குறிப்பு' என்பர் ஆசிரியர். **எனவே, காரைக்காலம்மையாரின் பெருமையையும் கண்ணப்பரின் பக்திக் காதலையும் பேசுகிறது இந்நூல்.**

அம்மையரார் வரலாறும் கண்ணப்பர் வரலாறும் கூறுகின்ற பெரிய புராணத்திலும், அம்மையாரின் அருள்வாக்கிலும், திருவாசகத்திலும் தேவாரத்திலும் ஊறிக்கிடக்கும் இந்த ஆசிரியருள்ளம் காரைக்கா

லம்மை புகழின் ஸாரத்தையும், காளத்திவேடன் கதையின் ஸாரத்தையும், 'இன்சொல் அமுதொழுகுகின்ற தமிழினில்' எடுத்து விளம்புகின்றது. 'காரைக்காலம்மையார் புராண'ஸாரம் உலக மகா ஞானிகளின் வாழ்க்கை அனுபவங்களுக்கெல்லாம் பொதுவான உயிர் நாதமாகவே ஒலி செய்கின்றது. கண்ணப்பர் கதையோ 'ஆசார பூசனைகளுக்கெல்லாம் மேலானது அன்பின் பூசனை' என்ற ஸர்வ சமய ஸாரமான தனிப்பெருங் கொள்கையின் கதைதான்.

'பிணம் தூக்கித்திரியும் பேய்' என்றூர் மனிதனை ஒரு பேரறிஞர். பிணத்தை உதறிவிட்டால் நிற்பது பேய் வடிவம் என்பது குறிப்பு. இறப்பினால் பிணத்தை உதறிவிடுகிறோமே என்றால், பிறப்பு வேறொரு பிணத்தைப் பேய்மீது சுமத்திவிடுகிறதல்லவா? எனவே மெய்யறிவைக்கொண்டு பிணத்தை உதறிப் பேயாகவேண்டுமென்பது பேரறிஞர்கள் கண்ட பெருநெறி.

ஊனடை வனப்பையெல்லாம்
உதறிஎற் புடம்பேயாக
வானமும் மண்ணுமெல்லாம்
வணங்குபேய் வடிவமானர்

என்பது காரைக்காலம்மையார் புராணம். உடம்பின் அழகை உதறி இறைவனது நற்கணத்தில் ஒன்றுனர் என்பர் சேக்கிழார்.

இறைவனது 'பேயாய நற்கணத்தில் ஒன்ருய நாம்' என்பது அம்மையார் வாக்கு. இந்த நிலையுற்றவர், 'முன்னிய பேய்க்கணம் சூழச்சூழக் காடும்கடலும் மலையும்மண்ணும் விண்ணும்சுழல அனல் கையேந்தி ஆடும்' ஆட்டத்தைப் பார்க்க ஆசைப்படுகிருர்;

எமக்கிதுவோ பேராசை! என்றும் தவிரா(து)
எமக்கொருநாள் காட்டுதியோ எந்தாய்!

என்று பிரார்த்தித்து அண்டமுற நிமிர்ந்தாடும் அந்த ஆட்டத்தையும் பார்த்துவிடுகிருர். அந்த நடனத்தின் உட்பொருளான இறை நிலையையும் கடவுள் நிலையையும் அம்மையார் பாடல்கள் அற்புதமாக விளக்குகின்றன.

உதாரணமாக 'அற்புதத் திருவந்தாதி'யின் பொருட் சுவையும் சொற்சுவையும் நடையழகும் உவமைநயம் முதலியனவும் அற்புதமாக நூற்றொரு நேரிசை வெண்பாக்களில் அமைந்திருக்கின்றன. பதினொராந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ள இவ்வந்தாதியின் பதினொராம் பாடலில் வருகிற

ஒன்றே நினைந்திருந்தேன்; ஒன்றே துணிந்தொழிந்தேன்;
ஒன்றேஎன் உள்ளத்தின் உள்ளடைத்தேன்......

என்று அனுபவித்துக்காட்டும் வழியே அற்புத பக்தி அனுபவங்களுக்கெல்லாம் அரசாங்க நல்வழி என்பதற்கு ஐயமும் உண்டோ? இந்த அற்புதத் திருவந்தாதியின் முறையும் கொள்கைகளும் முதலாழ்வார்களின் மூன்று திருவந்தாதிகளையும் நினைவூட்டுகின்றன. **இத்தகைய அந்தாதியின் பொருளேயன்றி மொழிகளும் அடிகளும் இப் புது நூலில் போற்றப் பெறுவது இதன் சிறப்பியல்புகளில் ஒன்று.**

காரைக்காலம்மையாரின் இறையுணர்வு கல்வியறிவுடன் கூடியது. கண்ணப்பரோ சிலை மலிந்த கலை தவிர வேறு கலை ஒன்றும் அறியாதவர். எனினும் இவரைக் 'கலை மலிந்த சீர் நம்பி' என்பர் சுந்தரர். இந்தக் கல்லாக் கலைக்குமுன் மற்றெல்லாக் கலைகளும் 'கல்லாமை' தானே. காரைக்காலம்மையார் கதையைக் காட்டிலும் பிரசித்தமானது கண்ணப்பர் கதை. திண்ணனுரின் வீரம் திடீரென்று இறையருளால் பக்தியாகவும் தியாகமாகவும் கனிந்துவிடுகிறது. வீரர் அதிவீரராகிறார். கண்ணப்பர்—என்ன அற்புதமான பெயர்! என்ன அற்புதமான—பொருள் பொதிந்த—கதை! **இக் கதையின் உட்பொருளை நினைந்து நினைந்து உருகி உருகி இந்த ஆசிரியர் பாடியிருக்கும் பாடல்களை இந்த அந்தாதியில் காண்கிறோம். கண்ணப்பர் காதலோடு ஆசிரியரது பக்திக் காதலின் நீளத்தையும், இந் நூலிலும் இதன் ரஸமான குறிப்புரைகளிலும் காணலாம்.**

காரைக்காலம்மையார், கண்ணப்பர் ஆகிய இவர்களுடைய அன்பும் தியாகமும் இந்தக்காலத்திற்கும், எந்தக்காலத்திற்கும் நல்வழி காட்டத்தக்கவை; புதிய புதிய வாழ்க்கைத் துறைகளிலும் ஒளிகாட்டி நெறி காட்டத்தக்கவை. மெய்யறிவை நுண்ணறிவிலும், நுண்ணறிவை நூலறிவிலும், நூலறிவைச் செய்தித்தாள் அறிவிலும் இழந்து வருவோருக்கு, **இந்நூல் ஒரு நல்ல வழிகாட்டியாக உதவ வேண்டுமென்று இறைவனை இறைஞ்சுகிறேன்.**

சென்னை
9—3—54

பி. ஸ்ரீ.

வடலூர்

கவி யோகி. ஸ்ரீ சுத்தானந்த பாரதி அவர்களின்

வா ழ் த் து ரை

— oo —

வாழ்க வாசகமணி,

அம்மைபாதி அப்பன்பாதி என்ற பொருத்தமான தலைப்பில் தாங்கள் அமைத்துள்ள வெண்பாக்கள் தமிழுக்கு அழகு செய்யும் பொன்பாக்களாகும். தங்கள் வாக்கும், நோக்கும், தூக்கும், தொடையும் பொலிக !

தங்கள் புலமையும், விரிந்த கல்வியும், கவர்ச்சியான சொல்லும், சிங்கம் போன்ற குரலும் தமிழகத்தைத் தட்டி எழுப்புக !

—சுத்தானந்தபாரதி.

சி றப் புப் பா யி ர ங் க ள்

கவிமணி. திரு. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்

— oo —

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

பந்தமறு காரைக்கால் அம்மை யாரைப்
பார்புகழும் கண்ணப்ப நாய னாரை
அந்திபகல் எப்பொழுதும் அன்பு மிக்க
அடியரெலாம் போற்றிநலம் அடையு மாறு
முந்துதிரு வாசகத்தேள் ளமுத முண்டு
முதிர்ந்தசுவை ஊறியசெந் நாவா லின்று
பைந்தமிழில் அந்தாதி பாடித் தந்தான்
பாவலனெம் பாலசுப்ர மணியம் மாதோ !

சென்னை

வரகவி. திரு. அ. சுப்ரமண்ய பாரதி அவர்கள்.

— oo —

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

1. இமையப்பூங் கொடியிடங்கொள் இறைவன் அன்பில்
ஈடுபட்டுத் தனையுணர்ந்த அறிவால் யாக்கைச்
சுமை தணந்து பேயுருவிற் கைலை சென்ற
தூயஅம்மை மீதுமன்பின் வடிவ மாகச்
சமைந்ததிருக் காளத்தி யப்பன் மீதும்
தான்கொண்ட பேரன்பு தூண்டச் சான்றோர்
அமைவதரி தெனத்தமிழில் அம்மை பாதி
அப்பன்பா தியெனுமந் தாதி தந்தான்.

2. அடியாருக் கடியனெனும் பாங்கி லோங்கும்
அன்பிலுயர்ந் திலகுமிவன் சைவம் கண்டோன்
உடையாத மனங்கொண்டோன் ஒழுக்கம் மிக்கோன்
உயர்திருவா சகமணியாம் பட்டம் பெற்றோன்
படிபோற்றும் தமிழ்மொழியைப் பயின்ற தன்றிப்
பண்பமைந்த ஆங்கிலமும் பயின்று மிக்க
நெடிதான வழக்கறிவும் கொண்டு வாழும்
நிபுணனும் பாலசுப்ர மண்யம் இன்னோன்.

3. தக்கவிற் பனர்மேவும் சபையின் முன்னே
சதுரனெனப் பிரசங்கம் செய்ய வல்லோன்
மிக்கஅன்பில் மனநெகிழ்ந்து தனை மறப்போன்
மெய்யன்பிற் குரியசின்னம் விளங்கப் பூண்போன்
சொக்கனடி மறவாத தொண்டன் அன்பு
தோய்ந்தமனப் பாங்கிலெனக் கன்ப னானோன்
இக்கவிஞன் இம்முறையில் இனும்பன் னூல்கள்
இயற்றி மகிழ்ந் தீண்டுபல் லாண்டு வாழ்க!

சேலம் மாவட்டம், தோரமங்கலம்

ஆசிரியர், புலவரேறு, திரு. அ. வரதநஞ்சையனுர் அவர்கள்

— oo —

எண்சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

1. துங்கமிகும் சமயநெறிக் கருத்த னைத்தும்
   சூழுறுப்பா யமையவவற் றுயிர்போல் மேலாய்த்
தங்கியே ஒன்றிரண்டென் றுத மோனத்
   தனிநிலைச்சித் தாந்தசைவம் போலொன் றுண்டோ?
மங்கையொரு பாலிருந்தும் ஒருவ னுன
   வாறேபோல் வதுகுறிப்பாம் அதனை நாடி
இங்கம்மை யப்பனுக்குப் பாதி என்னும்
   இன்றமிழ்நூல் புதிதியற்றி இசைபெற் முனே.

2. காரைக்கால் அம்மையன்பார் கண்ணப் பன்பேர்
   கருத்திலென்றும் நிலைத்திருக்கக் காட்டு வார்போல்
நேருற்ற வெண்பாக்கள் நூறுங் கூடி
   நிகழும்அந்தா தித்தொடையாய் நிலவக் காண்பேம்
சீருற்ற திருவாசகத்தின் மேலும்
   சேக்கிழார் மொழி,சைவச் சிறப்பு நூலில்
பேருற்ற சொற்பொருளின் சுவை நயங்கள்
   பெரிதுமுளம் கொண்டஅவன் பெருமை யம்மா!

3. உயரியபத் திக்கொருதாய் அகமாய்க் கற்போர்
   உளக்கல்லும் இழுதெரிமுற் பட்டாங் கன்பாற்
பெயரியகண் ணீரருவி யூற்று மாறுப்
   பேரின்ப வாரிபொழி தரவே செய்யும்
பயனுறுசீர்த் திருவாசகத்தில் தோய்ந்து
   பழுத்தமணி பாலசுப் பிரமண்யப் பேர்
நயனுடையான் தனையறிந்தோர் நெஞ்சினுள்ளே
   நாடோறும் நீங்காத நாவல் லோனே!

சென்னை அரசினர்,

துணை மொழிபெயர்ப்பாளர்

உயர்திரு. வல்லை. பாலசுப்பிரமணியம் அவர்கள்

— oo —

ஆசிரியப்பா

எத்தனை புண்ணியம் செய்தனை நெஞ்சே!
தத்து கடல்சூழ் தாரணி யதனில்
புண்ணிய நாடெனும் பரத கண்டத்தே
தண்ணளி மிக்க தமிழனாய்ப் பிறந்தாய்.
தந்தையர் செய்த தவப் பயனாலோ
முந்தி நீ புரிந்த நல்வினையாலோ
காசறு தமிழ்நூற் கடலிடைத் திளைத்தே
ஆசறக் கற்றும் அதன்வழி நின்றாய்.
இயலிசை நாடகத் தின்பம் தோய்ந்தாய்
மயலறுத் திடுமாண் கவிதைகள் சுவைத்தாய்
அத்தகு நூல்கள் அளவிறந் தனவே;

அவற்றுள் :—
நன்று நீபுரிந்த நல்வினை என்னே?
இன்றுனைத் தேடியோர் நூல்வந் ததுவே
அதுமொழிந் தோன்எனக் காருயிர் நண்பன்
பதும முகத்தோன்; பால் வெண்ணீற்றினன்
இளமைச் செவ்வி மாறா இயல்பினன்
என்னுடைப் பெயரோன்; ஆயினும் என்னின்
சாலவும் பெரியோன்; சதுரன்; சிறந்த
முன்னைப் பிறவியில் நேர்ந்த தவக்குறை
தன்னை முடிக்கத் தரணியிற் பிறந்தோன்
நாவலன்; பாவலன்; நானிலம் போற்றும்
சீலமே உருவன்; சிவனடிச் சிந்தையன்
ஆங்கிலம் அருந்தமிழ் என்னும் இவற்றுள்
பாங்குறு நூல்கள் பற்பல மொழிந்தோன்
கேட்டார்ப் பிணித்துக் கேளார் வியப்ப
வேட்ப மொழியும் வித்தக நாவலன்
இந்தா எனுமுன் கவி இருநூறு
இந்தா என்றே எழுதிக் கொடுப்போன்

திருவாசகமணிச் செம்மல் ; யாம் உவப்ப
ஒருவாசக மிங் கோதியிட் டானால்.

அதுதான் :—
மயில் புறங்கொண்ட மாண்புறு சாயல்
குயில் புறங்கொண்ட கோதறு மொழியாள்
ஏந்திழை நல்லாள், எந்தமர் குலதனம்
பூந்திரு வனப்புடைப் புனித வதியையும் ;
மூவிரு நாளில் மூண்டெழும் அன்பினால்
காவியங் கண்ணைக் கடவுளுக் கப்பிய
திருக் காளத்தி வேடன் தன்னையும்
ஒவ்வொரு வெண்பா தன்னுள மைத்து
நுவல்தொறுஞ் சுவைக்கும் நூறுவெண் பாவால்
அம்மைபால் அப்பன்பால் எனும் அந்தாதி
பத்தியில் திளைத்துப் படிக்க
எத்தனை புண்ணியம் செய்தனை நெஞ்சே !

தஞ்சை மாவட்ட, டெக்ஸ்டைல் கண்ட்ரோல்ஆபீஸர்

உயர்திரு. எஸ். இராமச்சந்திரப் பத்தர் பி. ஏ. அவர்கள்

— oo —

வெண்பா.

1. அம்மையிலா அப்பனிலா அம்மையப்பன் ஆவலுடன்
அம்மையப்பா என்றழைக்கும் அன்பரின்மேல்—
[அம்புவியில்
செம்பாக அந்தாதி செப்பினான் தீந்தமிழ்க்கே
எம்பால சுப்ரமண் யம்.

2. பூமாலை வாடிவிடும் பொன்மாலை தேய்ந்துவிடும்
பாமாலை என்றும் பரிமளிக்கும்—ஆமாற்றால்
பாலசுப்ர மண்யம் பரிவுடனே சூட்டியநல்
நூலிதனில் சொன்மலர்கள் நூறு.

3. பாலசுப்ர மண்யமெனும் பாவலவன் கோலமுடன்
சீலம் வளர்க்கும் திருவாளன்—ஞாலமிதில்
வாழியரோ அன்னவன்செய் வண்தமிழ்ப்பா அந்தாதி
ஊழிபல வாழி உயர்ந்து !

திருச்சி, சிவாஜி ஆசிரியர்

உயர்திரு. திருலோக சீதாராம் அவர்கள்

— oo —

வெண்பா.

கண்ணப்ப னென்னப்பன் கண்மூன் றுடையப்பன்
விண்ணப்ப னேயெனினும் வேடப்பன்—கண்ணப்பி
இட்ட பெருந்தயவி லன்றோதங் கண்ணிருந்து
கொட்டும்புண் ணீர்நின்ற தால். (1)

அப்பனொரு கண்ணப்ப னென்றோ உயிரனைத்தும்
ஒப்பி லவன்புகழை ஓதிடவே—வைப்பிலொளிர்
மாணிக்க நெஞ்ச மலரின் தொடைவைத்த
காணிக்கை அன்றோ கவி. (2)

அம்மை யவள்காரைக் காலம்மை யாமவரின்
செம்மைத் திருப்பாதம் சேர்ந்தாரே—மும்மையுமே
ஊனுதறப் பெற்றார் உறுவார் சிவயோக
வானுறையும் பேயாவ ரால். (3)

தஞ்சமெனக் கொண்ட தகைமை யவள்பாதி
செஞ்சொற் கவிமற்றைச் செம்பாதி—விஞ்சுபுகழ்
வீசும் தவவேடன் வீறு புகழ்ந்தேத்திப்
பேசுபுகழ் அந்தாதி யாம். (4)

அப்ப னொருபாதி அம்மையொரு பாதியெனச்
செப்புதிற லந்தாதிச் சீர்பாடி—ஒப்பில்மணி
வாசகமெய்த் தொண்டர் வளர்பால சுப்ரமணி
நேசமணி நெஞ்சில் நினை. (5)

†††

காரைக்கால் அம்மையைக் குறிக்கும் ஏனைய பாடல்கள்.

திருத்தொண்டத் தொகை

பேயார்க்கும் அடியேன்

—oo—

திருத்தொண்டர் திருவந்தாதி

நம்பன் திருமலை நான் மிதி
யேனென்று தாள் இரண்டும்
உம்பர் மிசைத்தலை யால் நடந்
தேற உமை நகலும்
செம்பொன் உருவன் என்
அம்மை எனப்பெற் றவள்செழுந்தேன்
கொம்பின் உருகாரைக் காலினின்
மேய குலதனமே.

—oo—

பெரியபுராணம்.

....
....
மயிலைப் புறங்கொள்மென்சாயல் மகளிர்கிளவி யாழினெடும்
குயிலைப்பொருவும் காரைக்கால் அம்மைபெருமை கூறுவாம் 1

மடுத்தபுனல் வேணியினர் ''அம்மை''என மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றாரைக்குலவியதாண் டவத்தில் அவர்
எடுத்தருளும் சேவடிக்கீழ் என்றுமிருக் கின்றாரை
அடுத்தபெரும் சீர்பரவல் ஆரளவா யினதம்மா. 2

ஆதி யோடந்தமில்லான் அருள்நடம் ஆடும்போது
கீதமுன் பாடும்அம்மை கிளரொளிமலர்த்தாள் போற்றி
....
.... 3

— oo —

கண்ணப்பரைக் குறிக்கும் ஏனைய பாடல்கள்.

திருத்தொண்டத் தொகை

கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற் கடியேன்

—oo—

திருத்தொண்டர் திருவந்தாதி

நிலத்தில் திகழ்திருக் காளத்தி
யார்திரு நெற்றியின் மேல்
நலத்திற் பொழிதரு கண்ணிற்
குருதிகண் டுள் நடுங்கி
வலத்திற் கடுங்கணை யால்தன்
மலர்க்கண் இடந்தப்பினுன்
குலத்திற் கிராதன்நம் கண்ணப்ப
னுமென்று கூறுவரே.

—oo—

திருவாசகம்

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னெப்பில் என்னையுமாட் கொண்டருளி
வண்ணப்பணித் தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ. 1

பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலசம் ஊனமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தங்(கு)
அருட்பெற்று நின்றவா தோணோக்கம் ஆடாமோ. 2

—oo—

பெரியபுராணம்.

....
....
உம்பர் பிரான் காளத்தி உத்தமர்க்குக் கண்ணப்பும்
நம்பெருமான் செய்தபணி நாம்தெரிந்த வாறுரைப்பாம். 1

மங்குல்வாழ் திருக்காளத்தி மன்னனார் கண்ணில்புண்ணீர்
தங்கணால் மாற்றப்பெற்ற தலைவர்தாள் தலைமேற்
[கொண்டே...

....
....திருத்தொண்டு புகலலுற்றேன். 2

கண்ணப்பரைப்பற்றிய ஏனைய இரண்டு நூல்களாவன :—

1. நக்கீர தேவ நாயனார் அருளிச் செய்த திருக்கண்ணப்ப தேவர் திருமறம்.

2. கல்லாட தேவ நாயனார் அருளிச்செய்த திருக்கண்ணப்ப தேவர் திருமறம்.

இவை இரண்டு நூல்களையும் பதினோரும் திருமுறையிற் காண்க.

—oo—

உ

திருச்சிற்றம்பலம்

அம்மைபாதி அப்பன்பாதி அந்தாதி

காப்பு

சீரார்ந்த மாகயிலை சேர்காரைக் காலம்மை
பேரார்ந்த நற்புகழைப் பேசிடவும்—தாரார்ந்த
காளத்தி வேடன் கவின்பாட வும்அருளாய்
நீளத்தி மாமுகனே நீ.

நூல்

— oo —

வெண்பா

திருவாயால் தேவியுமை சேரும் சிவனார்
வருவாயெம் அம்மையென வாழ்த்த—உருவாய்ந்த
பேய்வடிவால் மாகயிலை பேணியகா ரைக்காலின்
தாய்வடிவார் தாளே சரண். 1

அம்மைபாதி அப்பன்பாதி அந்தாதி—நக்கீரதேவ நாயனார் இயற்றியுள்ள கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி என்னும் நூலின் தலைப்பையும் முறையையும் தழுவிய நூல் இது என்பது கண்கூடு.

1. "வருமிவள் நம்மைப்பேணும் அம்மைகாண் உமையேமற்றிப்
பெருமைசேர் வடிவும்வேண்டிப் பெற்றனள் என்றுபின்னை
அருகுவந் தணையநோக்கி "அம்மையே" என்னும்செம்மை
ஒருமொழி உலகமெல்லாம் உய்யவே அருளிச்செய்தார்"
— பெரியபுராணம்

சரணம் அடைந்திறைவன் சந்நிதியில் சார்ந்தே
கரணம் திரிந்தீசன் கண்ணில்—இரணமுடன்
செங்குருதி தீர்க்கக்கண் சேர்ந்தப்பும் கண்ணப்பச்
சிங்கமவன் என்னப்பன் தேர். 2

தேராத· பேர்க்கும் சிவனருளே தேடிநனிச்
சாராத பேர்க்கும் தவமரிதென்(று)—ஆராத
அன்பினெடும் தேற்றியநல் காரைக்கால் அம்மைமொழி
இன்பினெடும் தேராய் இனி. 3

இனிஅந்தோ! என்செய்கேன் எம்பெருமான் நீதான்
தனிஎந்தாய் ஈண்டிருப்பத் தாங்கேன்—புனிதவெனக்
காளத்திக் கண்ணுதல்பால் கண்ணப்பன் கொள்காதல்
நீளத்தை நெஞ்சே நினை. 4

---

2. சார்ந்தே(தம்) கரணம்திரிந்து (அதனுல்) ஈசன்கண்ணில்.
கரணம் திரிந்து - சீவகரணம் சிவகரணமாக மாறி. காளத்தி இறைவனைக் கண்ட கண்ணப்பர்

"தங்கியபவத்தின் முன்னைச் சார்புவிட் டகலநீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல்பொருவில் அன்புருவ மானுர்"

என்றும்,

"அடியனேற் கிவர்தாம்இங்கே அகப்பட்டார்அச்சோ என்று,
படியிலாப் பரிவுதானோர் படிவமாம் பரிசுதோன்ற" நின்றுர்

என்றும் சேக்கிழார் பெருமான் கூறுதலை நோக்குக.

"சிந்தைபரங் கொளநின்ற திண்ணனுர்க்கு"
— பெரியபுராணம்

கண்ணப்பச் சிங்கம் - கண்ணப்பனுகிய சிங்கம்.

"செங்கண்வயக் கோளரியேறன்ன திண்மைத் திண்ணனுர்"
என்பதும்,

"என்னையாளும் கானவர்க்கரிய சிங்கம்"
என்பதும் சேக்கிழார் வாக்கு.

தேர் - தேர்வாயாக.

4. இனிஅந்தோ என்செய்கேன் - அந்தோ இனி என்செய்கேன். நீதான் தனிஎந்தாய் ஈண்டிருப்பத் தாங்கேன்—எந்தாய்நீதான் தனியாக இங்கிருப்பதைக் காணச்சகியேன்.

"இவர்தமைக் கண்டேனுக்குத் தனியராய் இருந்தார்என்னே".
"ஆர்தமராக நீரிங் கிருப்பதென் றகலமாட்டேன்" என்பவை பெரியபுராணத்தில் கண்ணப்பர் கூற்றும்.

காதல் நீளத்தை - அன்பின் அளவை, பெருமையை.

நினையா தொழிந்திடலும், நீள்மலராம் நின்றாள்
புனையா தொழிந்திடலும், போற்றிக்—கனையா(து)
ஒழிந்திடலும் இல்லேனை ஓங்குகா ரைக்கால்
கொழுந்தனைய தாயே குறி. 5

குறியொன்றும் இல்லாத கூத்தன் அருள்சேர்
நெறியொன்றும் காதலுற நேர்ந்தே—பிரிவறியாப்
பெற்றியினான் கண்ணப்பன் பீடுறுபேர் ஒன்றேகண்
நெற்றியினான் தொண்டர் நிதி. 6

நிதியாளும் நல்வணிகன் நின்னருமை தேராப்
பதியான போதிலும்இற் பண்பார்—விதிவழுவா(து)
இல்லறத்தைக் காரைக்கால் ஏய்ந்திடுதா யேசிறந்த
நல்லறத்தைக் காத்தாய்அந் நாள். 7

நாளும் தவமிருந்தென்? நன்னீரில் தோய்ந்தெழுந்தென்?
கோளும் சுகம்பெருக்கக் கூவியுமென்?—கேளிரிவண்
மண்ணப்பர் என்றுறைவீர்! மார்க்கம் தெளிவீரோ
கண்ணப்பர் என்றுரையாக் கால்? 8

---

5. காரைக்கால் கொழுந்தனைய தாயே—"அழகின்
கொழுந்தெழுவ தெனவளர்வார்" —பெரியபுராணம்
6. குறியொன்றும் இல்லாதகூத்தன்—"குறியொன்றும்
இல்லாத கூத்தன்தன் கூத்தை" — திருவாசகம்
"குறியும் நெறியும் குணமுமிலான்" — திருவாசகம்
நெறியொன்றும் - நெறியில் பொருந்தும்.
பிரிவறியாப் பெற்றியினான்—"பிரிவறிய பெற்றியனை"
— திருவாசகம்

கண் நெற்றியினான் - கண்ணுதலான், சிவபெருமான்.
தொண்டர்நிதி - அடியார்களது பொக்கிஷம்.
பதியானபோதிலும் - கணவனாக அமைந்திருந்தபோதிலும்.
இற்பண்பார் விதி - இல்லறத்தின் நியதிகள்.
"பாங்கில்வரும் மனையறத்தின் பண்புவழா மையிற்பயில்வார்"
— பெரியபுராணம்

8. கோளும் - நட்சத்திரங்களும்.
கேளிரிவண் - கேளிர், இவண் எனப்பிரிக்க.
மண்ணப்பர் - மண்ணுலகத்தின் தலைவர்.
தெளிவீரோ - ஓகாரம் எதிர்மறைப் பொருளது. தெளிய மாட்டீர்.

கால்நிலத்தே ஊன்றுமல் காண்பான்நீ கண்ணுதலைப்
பால்நிகர்த்த காதல் பனிவரைமேல்—மால்நிறைந்த
உள்ளத்தாய்! பேய்த்தாயே! உன்தலையால் போய்த்தாயே!
நள்ளத்தாய் ஆனுய் நனி. 9

நனிவேட்ட நாகன்றன் நற்சேயாய் நன்னுள்
தனிவேட்டை யாடித் தளர்ந்து—முனிவேட்ட
ஓங்குவரை உற்றவரை உற்றுநிறை கண்ணப்ப!
பாங்குவரை ஆயினை இப் பார். 10

பார்முழுதும் விண்முழுதும் பல்லூழி ஆய்ந்தாலும்
சீர்முழுதும் ஆர்ந்துதிகழ் செம்மையெலாம்—சேர்புகழின்
காரைக்கால் அம்மைதனைப் போலொருவர் கண்களினல்
ஆரைக்காண் டற்கியலும் ஆங்கு ? 11

---

9. பால்நிகர்த்த காதல்பனிவரை-"வெள்ளிக் கைலைமால்வரை". "படரொளிக் கைலைவெற்பு". "வெண்திரு நீறு புனைந்தெனப் பன்னும் நீள்பனி மால்வரை".

— பெரியபுராணம்

மால்நிறைந்த - தேவுமாலால் நிறையப்பெற்ற.

உள்ளத்தாய் - உள்ளத்தையுடையவரே.

பேய்த்தாயே - பேய் வடிவுடைய என் தாயே.

உன் தலையால் போய், தாயே நள்ளத்தாய் ஆனுய் என்று படிக்க.

தாயேநள்ள - உலகன்னையாகிய உமாதேவியே நயந்து நட்புணர்ச்சிகொள்ள.

தாய்ஆனுய் - எமக்கும் இறைவனுக்கும் தாய் ஆனுய்.

10. நாகன் - கண்ணப்பரின் தந்தை.

முனிவேட்ட - முனிவர்கள் விரும்பித் தவம் செய்கின்ற.

அல்லது

" மைதழையும் கண்டத்து மலைமருந்தை வழிபாடு
செய்துவரும் தவமுடைய முனிவர் சிவகோசரியார் "

என்னும் முனிவர் விரும்பிய எனினும் அமையும்.

உற்றவரை - அமர்ந்தவராகிய சிவபெருமானை.

பாங்குவரை ஆயினை - பாங்குடைய மலைபோல விளங்கினாய்.

" செவ்விய அன்புதாங்கித் திருக்கையில் சிலையும்தாங்கி
மைவரை என்னஐயர் மருங்குநின் றகலாநின்றார் "

— பெரியபுராணம்

" மணிநீர் மலையொன்று வந்ததென்ன " — பெரியபுராணம்

ஆங்கொருநாள் காளத்தி யப்பர்கண் பாய்குருதித்
தீங்கதனை என்கண்ணால் தீர்ப்பனெனப்—பாங்குறநீ
கண்ணிடந்திட் டப்பினையால் கண்ணப்பன் என்றபெயர்
மண்ணிடந்தான் பெற்றாய் மகிழ். 12

பெற்றாய் திருக்கயிலைப் பெம்மானை, பேய்வடிவே
உற்றாய் விருப்புறநீ ஓங்குபுகழ்—நற்றாயே
சீர்காரைக் காலம்மே செப்பரியாய்! ஒப்பரியாய்!
சேர்வாரைச் சேர்ப்பாய் சிவம். 13

சிவமே பொருளென்று தேர்வாரும், தேறித்
தவமே அருளென்று சார்ந்தும்—பவமுழுதும்
வென்றிடுவா ரும்திகைக்க வென்றவன்தான் கண்ணப்பன்
என்றிடுவார் என்றறிவா யே. 14

அறிவால், அருளகன்ற ஆணவத்தின் ஆற்றல்
செறிவால் சிவனடிதாம் சேரப்—பெறலுறுமோ?
என்றுரைத்த காரைக்கால் ஏய்ந்திடுதாய் நின்மொழிபோல்
ஒன்றுரைக்கப் போமோ உரை. 15

---

12. மண்ணிடந்தான் - பூவுலகில்.

13. செப்பரியாய் - செப்புதற்கு அரியவரே.
ஒப்பரியாய் - ஒப்பற்றவரே.
உன்னை வந்து சரணம்புகுவோரை நீ சிவத்திடம் சேர்ப்பிக்கின்றாய்.

14. தேர்வாரும், பவமுழுதும் வென்றிடுவாரும் திகைத்துநிற்க, இறைவன் திருவடிப்பேற்றைக் கண்ணப்பர் வென்றுவிட்டார் என்பது பொருள்.

"புற்றுமாய் மரமாய்ப் புனல்காலே உண்டியாய் அண்டவாணரும் பிறரும்
வற்றியாரும் நின்மலரடி காணாமன்ன என்னையோர் வார்த்தையுட்படுத்துப்
பற்றினாய்......"
"உலவாக்காலம் தவமெய்தி உறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப் பாவியேனைப் பணிகொண்டாய்"
— திருவாசகம்

15. "அறிவால்...... பெறலுறுமோ" — பசு, பாச ஞானத்தாலும், ஆணவத்தால் ஆக்கம்பெற்று அருளுக்குப் புறம்பாகிய உடல்

உரைகுழறி மெய்சிலிர்த்திட்(டு) உள்நிறைதேன் பொங்கிக்
கரைபுரளச் சார்ந்தெழிலின் காதல்—வரையெனநீ
கண்ணுதலார் காளத்திக் கோன்பாற்போய்க் கண்ணப்ப!
நண்ணுதலார் போற்றார் நனி? 16

போற்றாதே ஆற்றநாள் போக்கிப் பொருள்தேக்கி,
நோற்றாரைச் சாராதே நொந்தேனை—மாற்றாநீ
பாரைக்கால் பாவாத பண்புடையாய்! தந்தருளாய்
காரைக்கால் தாயே கதி. 17

கதியில்லேன் சீலமிலேன் கண்ணப்பன் காட்டும்
விதியில்லேன் காளத்தி வெற்பார்—பதியினையான்
காணுகிலேன் கண்ணிடந்திட் டப்புகிலேன் கைகுவித்துப்
பூணுகிலேன் அன்னவர்தாட் பூ. 18

பூவின் திருநாண்சீர்ப் பொற்பதனைப் போற்றாதே
தாவும் வடிவார்பேய் தானாய்—நாவின்
செழுந்தேன்அந் தாதிசொன சீர்காரைக் கால்தாய்!
அழுந்தேனோ நின்றாள் அருள்? 19

ஆற்றல் மனஆற்றலாலும் சிவனடியை அடைதல் இயலாது என்பது கருத்து.

"ஆர்வல்லார் காண அரனவனை" — அற்புதத்திருவந்தாதி.
"நூலறிவுபேசி நுழைவிலாதார் திரிக"
—அற்புதத் திருவந்தாதி.

16. நீ நண்ணுதலை யார் போற்றுதார்.

17. போற்றாதே ஆற்றநாள் போக்கி — "போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே" — திருநாவுக்கரசர்.
மாற்றா - மாற்றி.
பாரைக்கால் பாவாத - நிலத்தின்மீது கால்படாத.
"காலின் நடையினைத் தவிர்ந்துபார்மேல் தலையினால் நடந்துசென்றார்" — பெரியபுராணம்

19. பூவின் திருநாண்சீர்ப் பொற்பு — தாமரை மலரிலுள்ள லட்சுமி தேவியானவளும் வெட்கிக் குனியுமளவு உயர்ந்த அழகு. அல்லது திருமிகுந்த தாலிக் கயிற்றின் அழகு என்றும் கூறலாம்.
செழுந்தேன்போன்ற அற்புதத் திருவந்தாதி.
சொன - சொன்ன.

அருளே வடிவாகி ஆர்வமெலாம் சேர்ந்த
பொருளே எனவுரைப்பப் போந்தும்—தெருளாநீ
கார்வரைமேல் கண்வரையா தேயளித்த கண்ணப்ப!
நேர்வரையாய் அன்றிருந்தாய் நின்று. 20

நின்றிருந்தும் நேர்கிடந்தும் நித்தம் தவம்பலதான்
நன்றிருந்தும் யாவருமே நண்ணுச்சீர்க்—குன்றிருந்த
காவலனைக் கண்டதிருக் காரைக்கால் தாய்போல்யார்
பூவுலகில் வாழ்ந்தார் புகல். 21

புகலத்தான் ஈசன் புகழனைத்தும் தேரா
அகலத்தான் ஆயிடினும் அண்ணல்—மகிழத்தன்
கண்ணிடந்திட் டப்பியதோர் கண்ணப்பன் போலொருவர்
விண்ணிடந்தான் உண்டோ விளம்பு. 22

விளம்பிடத்தான் ஆமோசொல் வெள்விடைமேல் ஏறும்
களம்பிரியாக் கார்நிறத்தன் காதல்—இளம்பிடிதான்
என்றும் பிரியானை எம்காரைக் காலம்மை
நன்றும் பிரியானை நாம்! 23

நாமம் பயின்றறியாய்; நல்லாசான் பால்பனுவல்
காமம் அயின்றறியாய்; காளத்திச்—சேமன்பால்
சென்றவுடன் அன்புருவாய்ச் செம்பொருளைக் கண்ணப்ப!
ஒன்றவுடன் வைத்தாய் உளம். 24

தெருளா - தெருளி. செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

20. கண்வரையாதேயளித்த - வரையாது கண்ணினைத் தோண்டி வழங்கிய.

நேர்வரையாய் அன்றிருந்தாய் நின்று - நேரான மலைபோல அன்று நின்றாய்.

21. யார் பூவுலகில் உண்டே புகல் - பூதலத்தில் யார் உண்டு கூறுவாயாக. பூதலத்தில் வேறு புகலிடம் உண்டோ என்றும் பொருள் கூறலாம்.

22. அகலத்தான் - மார்பையுடையவன்.

23. களம்பிரியாக் கார்நிறத்தன் - நீலகண்டன்.
இளம்பிடி - உமாதேவி.

24. முறைப்படி இறைவன் நாமமந்திரங்களைக் கற்றறியாய்.
பனுவல் காமம் - நூல்மீது அன்பு.

உளமுழுதும் தேங்கியொளிர் ஓங்கன்பால் நின்பால்
வளமுழுதும் சேர்பொருளை வையத்(து)—அளவிலா
ஈசன் அடியவர்க்கே எம்காரைக் கால்அம்மை!
நேசம் உறவளித்தாய் நேர். 25

நேரிருந்த காளத்தி நின்மலனார் கண்ணில்புண்
நீரிருந்த காட்சி நிலையழிப்பக்—கூரிருந்த
நற்பகழி யால்தன்கண் நன்கிடந்த கண்ணப்பன்
சொற்புகழின் தாளென் துணை. 26

தாள்பேரில் பேரும்பா தாளம் தலைபேரின்
நீள்முகடு பேருமவர் நீண்டகரத்—தோள்பேரின்
வான்திசைகள் பேருமென வள்ளல் திறமுரைத்தாய்
கான்திசைக்கா ரைக்கால்தாய் காண். 27

காணும் பொழுதெல்லாம் காளத்திக் கார்வரைமேல்
தோணும் படிக்கருள்சேர் தூயஉருப்—பூணும்
சிலைமலிந்த காட்சிக்கண் ணப்பனைத்தான் தேர்வார்
கலைமலிந்த நம்பிஎனக் காண். 28

நல்லாசான்பால் அயின்றறியாய் - நல்ல ஆசிரியர் மூலம் அனுபவித்தறியாய்.

சேமன் - சேமத்தைச் செய்யும் சிவபெருமான்.

ஒன்ற - பொருந்த.

25. காரைக்காலம்மை அடியவர்க்குத் தம்பொருளை வழங்கியது கூறப்பட்டுள்ளது.

26. புண்நீர் - இரத்தம்.

நிலையழிப்ப - மனத்தின் முன்நிலையைக் குலைக்க.

நற்பகழி - நல்ல அம்பு. சிவனுக்குதவுமாறு கண்ணப்பரது கண்ணைத் தோண்டி எடுக்க உதவியதால் நல்ல அம்பு எனப்படும்.

27. கான்திசைக் காரைக்கால் - திசைகளிலே காடுகளையுடைய காரைக்கால்.

28. சிலைமலிந்த காட்சி - வில்லினை ஏந்தி நிற்கும் காட்சியையுடைய.

கற்சிலையாக அமைந்து காட்சிதரும் எனினும் அமையும்.

‘கலைமலிந்த நம்பிஎனத் தேர்வார்காண்’ என வாசிக்க.

“கலைமலிந்த சீர்நம்பி கண்ணப் பர்க்கடியேன்”

என்பது சுந்தரர் திருத்தொண்டத் தொகை.

காண்பார்க்குச் சோதியாய்க் காட்சிதரும் ஈசனடி
பூண்பார்க்கு மாகயிலைப் பொன்மேனி—மாண்பரன்சீர்
செம்மையுடன் அன்றுரைத்த சீரறிந்தே காரைக்கால்
அம்மைதனக் காயினன்காண் ஆள். 29

ஆளும் படிக்குலகை அச்சுறுத்தி ஆட்கொன்றே
வாளும் பிடித்துழலும் வன்மையரே!—கேளும்சீர்க்
கண்ணப்பன் வார்கழலே கைப்பற்றுக் கால்வாழ்க்கை
உண்ணப்பட் டோய்வீர் ஒளி. 30

ஒளிகொள் மிடற்றரனை உள்நினைவீர் என்றே
அளியுடனே காரைக்கால் அம்மை—தெளிவீர்நீர்
ஏழைகாள்! என்றுரைக்கக் கேட்டேயும் ஏங்கியழி
கோழைகாள்! ஏனோ குறை? 31

குறைவில் நிறைவாகிக் கோதில் குணமார்
நிறைவின் பொருளாகும் நீர்மை—இறைவனையே
வேட்டவனாய்க் கண்ணப்ப! வேட்டுவனீ எந்தைவிழி
மீட்டவனாய் நின்றாய் மிக. 32

மிக்க முழங்கெரியும் வீங்கிய பொங்கிருளும்
ஒக்க சடைகுழல்தான் ஒவ்வாவே—தக்க
அழலுருவோய் என்றுரைத்த காரைக்கால் அம்மை
நிழலுறுதாள் என்புகலாம் நேர். 33

நேர்ந்ததொரு வேட்டைதனில் நீள்பன்றிப் பின்னோடி
ஆர்ந்தமலை காளத்தி அப்பனைப்போய்ச்—சார்ந்தவ்வைத்
தீயிட்டுக் காய்ச்சியபின் கண்ணப்பன் தேர்ந்தசுவை
வாயிட்டு வைத்தான் வகை. 34

---

30. உலகை வெல்ல அதனைப் பயமுறுத்திப் போர் புரிவோரைப் பார்த்துக் கூறியது.
"வாழ்க்கைஒளி உண்ணப்பட் டோய்வீர்" என வாசிக்க. அதாவது, உங்களது வாழ்க்கையின் உண்மையொளி மறைந்துபோம் என்பது பொருள்.

31. ஏங்கியழி - மனம் ஏங்கி அழிகின்ற.

32. வேட்டவனாய் - விரும்பினவனாய்.
விழிமீட்டவனாய் - கண்ணைத்தந்தவனாய்.

33. என்புகலாம்நேர் - எனது நேரான புகலிடமாம்.
சடைகுழல் - உம்மைத்தொகை. சிவனது செஞ்சடையும் உமையின் கருங்குழலும்.

வகைமிகுத்த வாழ்வதனில் வாழாமல் வாழ்ந்தும்
நகைமிகுத்து நாணிழந்த நங்காய்!—சிகையுகுத்த
பேய்வடிவத் தாலன்றோ பேரின்பம் காரைக்கால்
தாய்வடிவார் பெற்றார் தனி. 35

தனியாகம் வேண்டா; தமர்விடுத்தும் ஓய்ந்தே
இனியோகம் வேண்டாவே ஏதும்—பனியாரும்
செஞ்சடையான் தாள்சேரச் சீரார்கண் ணப்பனடி
நெஞ்சடைதல் ஒன்றே நினை. 36

ஒன்றே நினைந்திருந்தேன் ஒன்றே துணிந்தெழுந்தேன்
ஒன்றேஎன் உள்ளத்தின் உள்ளடைத்தேன்—என்றேமுன்
நற்றமிழே பாடியகா ரைக்கால்தாய் நற்பதத்தை
உற்றமிழ்தாய்க் கொண்டே உணர். 37

உணருங்கால் ஒன்றை உருத்தெரியக் காட்டான்
புணருங்கால் ஆரமுதைப் போல்வான்—பணஅரவின்
தாரானைத் தன்னைத்தான் தந்தானைக் கண்ணப்பன்
நேராகக் கண்டான் நினை. 38

நினைந்திருந்தும் வானவர்கள் நீள்மலரால் பாதம்
புனைந்திருந்தும் தாள்பொருந்தாப் பொன்னை-முனைந்துபேய்

---

35. வாழாமல் வாழ்ந்தும் - வாழத்தெரியாமல் வாழ்ந்தும்.
நகைமிகுத்து - சிரிப்பிற்கிடமாக. நகைகளை மிகவும் அணிந்து எனினும் பொருந்தும்.
நாணிழந்த நங்காய் - வெட்கத்தைக் கைவிட்ட பெண்ணே. கழுத்திலுள்ள தாலிக்கயிற்றை இழந்த பெண்ணே என்றும் கூறலாம்.
சிகையுகுத்த - தலைமயிரைக் கழித்த.

36. கண்ணப்பனடி சேர்தல் ஒன்றே போதும். தவமும் யோகமும் வேண்டா என்பது கருத்து.

37. உற்று அமிழ்தாய்க்கொண்டு உணர்வாயாக.

38. தாரானை - மாலையானை.
தன்னைத்தான் தந்தானை—தன்னையே தருவோனை.
"தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச் சங்கரா"
— திருவாசகம்

39. தாள் பொருந்தா - திருவடிகளைச் சாரமுடியாத.
தாள்வடிவாக் கொண்டுன் தலை - உன் தலையைப் பாதமாகக் கொண்டு.

நீள்வடிவால் காரைக்கால் தாயேநீ நேர்கண்டாய்
தாள்வடிவாக் கொண்டுன் தலை. 39

தலையால் பலிதேரும் தாவில்கா ளத்தி
மலையாற் கமுதூட்டும் மாண்பால்—கலைமீது
தாங்கெழிலார் பன்றித் தசையளித்த கண்ணப்பன்
ஓங்கெழிலின் பேரே உரை. 40

உரைமருவி யாமுணர்ந்தோம் உள்ளத்துள் ஆளாய்த்
திரைமருவு செஞ்சடையான் சீந்தாள்—தெரிமின்கள்
எம்மைப் புறமுறைப்ப(து) ஏனென்ற காரைக்கால்
அம்மைப் புகழுரைப்பாம் ஆர்ந்து. 41

ஆர்ந்ததிருக் காளத்தி அப்பருக்கே வாய்நீரும்
நேர்ந்ததொரு பன்றி நிறையமுதும்—சேர்ந்திருந்த
குஞ்சி இலைக்கொத்தும் கொண்டணைந்தான் கண்ணப்பன்
அஞ்சி நிலையறிந்த அன்று. 42

அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன்—என்றும்தான்
எவ்வுருவோ நின்னுருவம் என்றதிருக் காரைக்கால்
அவ்வை வினாப்பொருள்என் ஆம்? 43

என்னும்இப் பாழ்பிறவி என்றேங்கும் ஏழைகாள்!
மன்னுரும் காளத்தி மாமலைமேல்—எந்நாளும்
நீண்ட சிலையுடனே நின்றிருக்கும் கண்ணப்பன்
பூண்ட நிலையறிவீர் போய். 44

---

40. பேரேஉரை - நாமத்தையே உரைப்பாயாக.

41. அம்மைப்புகழ் - அம்மையின் புகழை.

42. அஞ்சி நிலையறிந்தஅன்று - தீய சகுனங்களால் இறைவனைப்பற்றிய அச்சம் எய்திய அன்று.

"இத்தகு தீயபுட்கள் ஈண்டமுன் உதிரங் காட்டும்
அத்தனுக் கென்கொல் கெட்டேன் அடுத்ததென்
றணையும்போதில்.
— பெரியபுராணம்

43. அவ்வை - மூதாட்டியார்.
வினாப் பொருள் என்ஆம் - கேள்வியின் உட்பொருள் யாதோ?

போய்ஆலங் காடதனில் பொற்புநடத் தற்புதன்முன்
பேய்ஆகும் காரைக்கால் பேரருள்சேர்—தாய்தானும்
இன்றும் நிலைத்துமகிழ்ந் தேத்தியுறும் இன்பத்தை
ஒன்றும் மனத்தால் உணர். 45

உணரத்தான் சீரொளியை ஓங்குகா ளத்தி
புணர்அத்தா ! என்றழைத்தே போந்த—குணமிக்க
காழியர்கோன் வீழ்ந்தெழுந்து கண்டார்கண் ணப்பனைமுன்
வாழியபோற் றல்பயனை வந்து. 46

வந்தணைந்து காத்தளிக்கும் வல்லாளன் தன்னையொளிர்
இந்தணைந்த வார்சடையின் எம்மானைச்—சந்தமுறும்
கண்டம் கறுத்தானைக் காரைக்கால் அம்மைநீ
கண்டன் றுரைத்தனையே காண். 47

காணத் தகுந்ததிருக் கண்ணுதலார் தொண்டருளே
பூணத் தகுந்ததொரு பொன்னடியார்—பேணத்தான்
வேண்டிடுவீர் கண்ணப்பன் மேவியசீர் காளத்தி
தீண்டிடுவீர் சேர்வீர் தெருள். 48

தெருளார் அடியவர்க்குத் தீங்கனியொன் றீந்தும்
அருளால் இருகனிகள் ஆர்ந்தும்—மருளாரும்
நின்கணவற் கன்றளித்த நீள்காரைக் கால்அம்மே
என்கணருள் செய்வாய் இனி. 49

---

46. ஓங்குகாளத்தி புணர்அத்தா - உயர்ந்த காளத்தி மலையில் பொருந்திய சிவபெருமானே.

காழியர்கோன் - திருஞானசம்பந்தர்.

வந்து வீழ்ந்தெழுந்து போற்றல் பயனைக் கண்ணப்பரை முன் கண்டார் என்று வாசிக்க.

காளத்தியப்பரை வீழ்ந்து கும்பிட்டு எழுந்த திருஞான சம்பந்தப் பெருமான் அந்த வணக்கத்தின் பயனாக இறைவன் அருகில் நின்ற கண்ணப்பரைக்கண்டு தரிசித்தார் என்று சேக்கிழார் கூறுகிறார்.

“ சூழ்ந்துவலம் கொண்டிறைவர் திருமுன்பெய்தித்
தொழுதுதலை மேற்கொண்ட செங்கைபற்றி
வீழ்ந்தெழுவார் கும்பிட்ட பயன்காண்பார்போல்
மெய்வேடர் பெருமானைக் கண்டுவீழ்ந்தார் ”

— பெரியபுராணம்

49. என்கணருள் - என்பால் அருள்.

இனிப்பிரியான் இம்மலையைத் தேவுமால் ஏய்ந்தான்
தனிப்பெரியோன் என்றுன்னைச் சார்ந்தோர்—நனிபிரியச்
சார்புணர்ந்து சார்புகெடத் தானுயர்ந்தாய் கண்ணப்பன்
பேர்புணர்ந்த நீதான் பிறங்கி. 50

பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மையார்கண் டாளென்றே மாண்புறநீ பாடினைகாண்
மெய்யார்கா ரைக்காலம் மே! 51

அம்மேயப் பாவென்றே அன்றழுதார் கண்துடைத்துத்
தம்மேன்மைக் கையால் தவிர்த்தசிவன்—செம்மைவிழி
பாய்குருதி தான்துடைத்துப் பாய்ந்தளித்தாய் கண்ணப்ப!
செய்கருதும் பாவனையால் சென்று. 52

சென்றடையாச் செம்மைத் திருவுடையான் மாகயிலைக்
குன்றுடையான் தன்னைக் குறுகலுமே—அன்றரன்தான்
"அம்மை" எனுமொழிதான் காரைக்கால் அம்மைதனைச்
செம்மை யுறமொழிந்தான் செப்பு. 53

---

50. தேவுமால் - கடவுட்பித்து.

"தேவுமால் கொண்டான் இந்தத் திண்ணன் மற்றிதனைத்
தீர்க்கல் ஆவதொன் றறியோம்" — பெரியபுராணம்

"அங்கிவன் மலையில் தேவர் தம்மைக் கண்டணைத்துக்கொண்டு
வங்கினைப் பற்றிப்போதா வல்லுடும்பென்ன நீங்கான்"
— பெரியபுராணம்

"சார்புணர்ந்து சார்புகெட ஒழுகின் சார்புணர்ந்து
சார்தரா சார்தரு நோய்"

என்ற குறளை நோக்குக.

52. ஞானசம்பந்தர் அழுதபொழுது அவரது கண்களைத் துடைத்த சிவபிரானது கண்களையே நீ துடைத்து ஆறுதல் கூறினாய் என்பது பொருள்.

செய்கருதும் பாவனையால் சென்று - பிள்ளையானது தாயையடையும் மனோபாவத்துடன் அடைந்து.

"தாய்க்கட் கன்றெனச் சென்று"
— திருக்கண்ணப்பதேவர் திருமறம்

53. சென்றடையாச் செம்மைத் திருவுடையான் - "சென்றடையாத திருவுடையானை" — திருஞானசம்பந்தர்

மொழிந்தறியாய் மந்திரங்கள்; முப்போதும் மூழ்க
இழிந்தறியாய் நீரில் எனினும்—கழிந்துவினை
தக்கநலம் ஆற்றினையால் கண்ணப்ப! தாள்நிழற்கீழ்
பக்கவலம் வைத்தான் பரன். 54

பரன்என்கோ பண்புணர மாட்டேன் பரிவால்
அரன்என்கோ என்றுரைத்தாய் அன்றே—சிரமதனில்
கங்கை உடையானைக் காரைக்கால் அம்மைநீ
சங்கை இதன்தெளிவு தா. 55

தானறப்பெற் றோர்க்குள் தலையாவான் நீஎனவே
வானுறப்பெற் றோங்கும் வளமுடையாய்—கோனவன்கண்
நோயினைமுன் தன்னோய்போல் நோற்றதனால் கண்ணப்ப!
ஆயினைநீ மேலோன் அறி. 56

அறிவானும் தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே—அறிகின்ற
மெய்ப்பொருளும் தானெனக் காரைக்கால் மேவியதாய்!
அப்பொருளை நீயுரைத்தா யால். 57

ஆலம் குடித்தார் அதன்கைப்பை மாற்றுதற்கோ
கோலம் திகழ்பன்றிக் கோதிலூன்—சீலமுற

---

54. பக்கவலம் - அருகிலுள்ள வலப்பக்கத்தில்.

55. சங்கை இதன் தெளிவுதா - இந்தச் சந்தேகத்தைத் தெளிவு படுத்தித் தருவாயாக.

56. தானறப் பெற்றோர்க்குள் - யான் என்னும் செருக்கற்றவர்களுள்.

"தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்" — திருக்குறள்

கோனவன்கண் நோயினைநீ தன்னோய்போல் நோற்றனை—

"அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின்நோய்
தன்னோய்போல் போற்றாக்கடை" — திருக்குறள்

58. ஆலம்குடித்தார் - சிவபெருமான்.

அதன்கைப்பை மாற்றுதற்கு - அவ்விஷத்தின் கசப்புத் தன்மையைத் தம் வாயினின்றும் அகற்றுதற்கு.

கோதில்ஊன் - "நல்லூன்"

"இவ் விறைச்சிசால அழகிது" — பெரியபுராணம்

பழகுநின் நாச்சுவைத்தே என்று கொள்க.

நின்பழகு நாச்சுவைத்தே நீயளிப்பக் கண்ணப்ப!
அன்பொழுக உண்டார் அறை. 58

அறைவாயால் காரைக்கால் அம்மைநீ அன்பார்
இறைவனே யாவும் இயைவித்(து)—இறைவனே
மற்றெம்மேல் வந்ததுயர் மாற்றிடுவான் என்றினியாம்
சுற்றம்மேல் வேண்டுவதோ சொல்? 59

சொல்லும் மறையிற் சுகமிருக்கும் நின்சொல்லே;
மெல்லும் அவிச்சுவையின் மேலதுவாய்—வெல்லும்காண்
நீயளிக்கும் ஊன்எனத்தான் நேர்ந்துரைத்தான், கண்ணப்ப!
தாயளிக்கும் மேன்மையரன் தான். 60

தானத்தான் உம்பர்கோன் என்பசிலர் தாவில்சீர்
வானத்தான் என்ப வகைவகையாய்—ஞானத்தான்
என்பவன்என் நெஞ்சத்தான் என்றேத்திக் காரைக்கால்
அன்பமர்தாய்! சொன்னாய் அரன். 61

அரன்தான்எல் லாவுயிர்நோய் ஆர்ந்தகற்றி ஞ்லும்
பரன்தான்கொள் கண்ணேயைப் பார்த்தே—உரம்தான்சேர்
நீதீர்த்தாய் ஆதலினால் நின்னைப்போல் கண்ணப்ப!
மாதீர்த்தம் உண்டோ மகிழ். 62

---

59. சுற்றம் மேலும் வேண்டப்படுவதோ.

60. சொல்லும் மறையிற் சுகமிக்கும் நின்சொல்லே—

“மன்பெருமா மறைமொழிகள் மாமுனிவர் மகிழ்ந்துரைக்கும்
இன்பமொழித் தோத்திரங்கள் மந்திரங்கள் யாவையினும்
முன்பிருந்து மற்றவன் தன் முகமலர அகமெகிழ
அன்பில் நினைந் தெனையல்லால் அறிவுறுமொழி நல்ல”
— பெரியபுராணம்

மெல்லும் அவிச்சுவையின்மேலதுவாய் வெல்லுங்காண் நீயளிக்கும் ஊன்—

“வெய்யகனற் பதங்கொள்ள வெந்துளதோ எனுமன்பால்
நையுமனத் தினிமையினில் நையமிக மென்றிடலால்
செய்யுமறை வேள்வியோர் முன்புதரும் திருந்தவியில்
எய்யும்வரிச் சிலையவன்தன் இட்ட ஊன் எனக்கினிய”
— பெரியபுராணம்

61. சொன்னாய் அரன் – சிவனைப்பற்றிக் கூறினாய்.

62. எல்லாருடைய நோய்களையும் தீர்க்கும் சிவபிரானது கண்ணேயையே நீ தீர்த்தாய் ஆதலினால் உன்னைவிட உயர்ந்த தீர்த்தம் கிடையாது என்பது பொருள்.

மகிழ்தி மடநெஞ்சே! மானிடரின் நீயும்
திகழ்தி பெரும்சேமம் சேர்ந்தாய்—இகழற்க
பேரன்பே கோடிஎனப் பேசியகா ரைக்கால்தாய்
சீரன்பே கண்டோம் தெளி. 63

தெளிவுடனே பல்கலைகள் தேர்ந்தோர்க்கும் ஒண்ணு
ஒளியுடனே நற்றவத்தால் ஓங்கி—எளிதாய்
மலையார்ந்த மன்னனடி மன்னினைகண் ணப்ப!
தலையார்ந்த அன்பால் தக. 64

தகவுடையான் அல்லானைத் தான்மணந்த போதும்
மிகவுடையா ளாய்க்கற்பு மேவும்—அகமுடனே
நின்கொழுநர் சொற்காத்தாய் நீள்காரைக் கால்அம்மே!
முன்தொழுநர் என்றுமனம் மூண்டு. 65

மூண்டெழுந்த அன்பினுக்கோர் முன்னெடுத்துக் காட்டாக
ஈண்டெழுந்த தொண்டருளே ஏற்றமுற—ஆண்டெழுந்த
மாணிக்க வாசகருன் மாண்புரைத்தால், கண்ணப்ப!
பேணிக்கொள் ளார்பிறர்யார்? பேசு. 66

---

63. கோடி – கொள்வாய்.

64. கலைகள் கற்றவர்க்கும் உணரவொண்ணாத இறைவனடியைத் தலையாய அன்பால் நீ அடைந்தனை.

65. தகுதியற்ற கணவனாயினும் அவனது சொல்லைக்காத்து நீ உண்மையைக் கூறினாய் என்பது பொருள்.

“கைவருகற் புடைநெறியால் கணவனுரை காவாமை
மெய்வழியன் றெனவிளம்பல் விடமாட்டார் விதிர்ப்புறுவார்”.

“செய்தபடி சொல்லுவதே கடன் என்னும் சீலத்தார்
....
எய்தவரும் கனியளித்தார் யார் என்னும் கணவனுக்கு
மொய்தருபூங் குழல்மடவார் புகுந்தபடிதனைமொழிந்தார்”
— பெரியபுராணம்

முன்தொழுநர் என்று – முன்பு போற்றத்தக்கவர் என்று.

“தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை” — திருக்குறள்

66. முன்னெடுத்துக்காட்டாக - உதாரணமாக.
அறிவாற் சிவனென மணிவாசகரே நின்னைக்,
“கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி”
என்று பாடிப் புகழ்ந்துள்ளாரேயானால், வேறு யார்தான் உன்னைப் புகழாமல் இருக்கமுடியும்?

பேசித்தான் நூலறிவு பேதித்தோர் தாம்திரிக!
நேசித்தோர் நெஞ்சுவந்த நீனுருவில்—யோசித்தே
வந்தருள்வான் ஈசனெனக் காரைக்கால் வாழ்அம்மே!
அந்தரங்கம் நீயுரைத்தா யாம். 67

ஆமை எனஒருமை ஐந்தடக்கல் ஆற்றிப்பின்
தீமை அகன்றுதவம் செய்திறையை—ஓம்எனவே
ஏத்திடினும் எம்பெருமான் ஏந்தல்கண் ணப்பனைப்போல்
காத்திடுமோ சொல்வீர் கலந்து. 68

கலங்கு புனற்கங்கை யூடால லாலும்
இலங்கு மதிஇயங்க லாலும்—நலங்கொண்ட
ஈசன் சடைவிசும்பாம் என்றுரைத்தாய் காரைக்கால்
நேசம் நிறைந்திடுதாய் நீ. 69

நீல மணிமிடற்றான் நீண்ட வலந்தனிலே
கோல முடன்திகழும் கோமளமே—சீலமுடன்
பண்ணளித்த காழியரும் பாடிமகிழ் கண்ணப்ப!
கண்ணளித்த கற்பகமே கா. 70

---

67. நூலறிவினால்மட்டும் வாலறிவன் திருவடிப்பேறு கிட்டாது என்பது கருத்து.

அந்தரங்கம் - இரகசியம், உட்பொருள்.

68. ஆமை...... ஆற்றிப்பின் - ஆமையைப் போல ஒடுங்கிய மனத்தால் ஐந்து புலன்களையும் அடக்குதல் செய்யும் துறவிகள்.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்புடைத்து" — திருக்குறள்

தீமைஅகன்று - தீமைநீங்கி.

செய்திறையை - செய்து இறைவனை.

எம்பெருமானாகிய சிவபெருமான் ஏந்தல் கண்ணப்பனைக் காத்தது போல் பிறரைக் காப்பாரோ? மாட்டார் என்றவாறு.

69. வானிலே பாய்கின்ற ஆகாச கங்கையும் பிரகாசிக்கின்ற சந்திரனும் இறைவனது சடையின்மேலும் விளங்குவதால் அவரது சடையானது வானத்தையொத்துள்ளது என்பது கருத்து.

70. கண்ணப்பர் காளத்தியப்பரின் வலப்பாகத்தில் என்றும் நிலைத்திருப்பதைக் குறிக்கிறது.

"பேறினி இதன்மேல்உண்டோ பிரான்திருக் கண்ணில்வந்த
ஊறுகண் டஞ்சித்தங்கண் இடந்தப்ப உதவும்கையை
ஏறுயர்த் தவர்தம்கையால் பிடித்துக்கொண் டென்வலத்தில்
மாறிலாய் நிற்கஎன்று மன்னுபே ரருள்புரிந்தார்"
— பெரியபுராணம்

காருருவக் கண்டத்தெம் கண்ணுதலே எங்கொளித்தாய்
ஓருருவா யுன்னோ டுழிதருமால்—சீருடைய
நின்பாகத்(து) என்றரனை நீள்காரைக் காலம்மே!
முன்பாகக் கேட்டாய் முறை. 71

முறையோதி மந்திரங்கள் முக்காலும் பூசை
மறையோன்செய் தாலும் மலைமேல்—இறையோன்றன்
நின்எச்சில் நீர்சருகு நீள்பன்றி யூன்இவைதான்
முன்நச்சி யுண்டான் முதல். 72

முதல்நடுவீ றாகி முழுதும் புரப்போன்
இதமுடனே மேவும் இமயம்—அதன்மீதே
பேய்வடிவாற் சென்ற பெருமாட்டி காரைக்கால்
தாய்வடிவே ஆகும் தரு. 73

தருவாய் வரம்என்றே சார்ந்திறைஞ்ச ஏனோர்
உருவாய்க் கொழுவியவூன் உண்பாய்—திருவாயால்
என்னுயிரின் ஈசஎன ஏங்கியகண் ணப்பநினை
இன்னுயிரே என்றுறைவேன் யான். 74

பண்ணளித்த காழியரும் - இசைப்பதிகம் பாடிய ஞான சம்பந்தரும்.

கண்ணளித்த கற்பகமே கா – இறைவனுக்குத் தன்கண்ணை வழங்கிய கற்பகத்தருபோன்றவனே என்னைக் காப்பாயாக.

71. முன்பாகக் கேட்டாய் - நேராகக் கேட்டாய்.

72. முறையால் மந்திரங்களைச் சொல்லி மூன்றுவேளை பூசை செய்த சிவகோசரியாரது அன்பைவிட அதிகமாக நினது எச்சில் நீர், சருகு, பன்றியூன் முதலியவற்றைச் சிவபிரான் விரும்பி ஏற்றுக்கொண்டார்.

73. தரு - கற்பக விருட்சம்.

74. ஏனையவர்கள் எல்லாம், "எமக்குவரம் தருவாய் ஈசனே" என்று இறைஞ்சி நிற்க, கண்ணப்ப, நீ ஒருவன்தான் "என் உயிரனைய ஈசனே நல்ல இவ்விறைச்சியை உன் திருவாயால் உண்டருள்வாயாக" என்று ஆர்வத்துடன் கேட்டுக்கொண்டாய். இத்தன்னலமற்ற அன்பைக்காட்டிய நின்னை யான் எனது இன்னுயிராகவே கருதுகிறேன்.

யானே தவமுடையேன் என்னெஞ்சே நன்னெஞ்சம்
யானே பிறப்பறுப்பான் எண்ணினேன்—யானேநல்
அம்மானுக் காளான தால்என்ற காரைக்கால்
அம்மாளுக் காள்யான் அறி. 75

அறிவில்லார் அன்புசிவம் ஆகும்வே றென்பார்
அறிவார் சிவமன்பொன் றாகும்—அறியென்பார்
என்ற மறைமொழிக்கே என்றுமுளாய் கண்ணப்ப!
நின்ற நிறைபொருளாய் நேர். 76

நேர்ந்தரவம் கொள்ளச் சிறுகிற்றோ? நீயதனை
ஈர்ந்தளவே கொண்டிசைய வைத்தாயோ—சார்ந்த
இளமதியை எம்மானே? என்றிடுகா ரைக்கால்
வளமதிதாய்! நீசொல் வழி. 77

வழிகாட்டி நிற்கூட்டி வள்ளலவர் புண்ணீர்
விழிகாட்டி நின்விழிதான் வேட்பப்—பழிகாட்டும்
வாள்குலத்தே வந்துதித்தும் வண்மையினால் கண்ணப்ப!
நீள்குலத்தோன் போற்பொலிந்தாய் நீ. 78

---

75. " யானே தவம் செய்தேன் ஏழ்பிறப்பும் எப்பொழுதும்
யானே தவமுடையேன் எம்பெருமான் - யானே
இருந்தமிழ்நன் மாலை இணையடிக்கே சொன்னேன்
பெருந்தமிழன் நல்லேன் பெரிது. —பூதத்தாழ்வார்

இப்பாடலையும்,
" நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன் "
என்ற திருவாசகப்பாடலையும் ஒப்புநோக்குக.

76. " அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பும் சிவமும் ஒன்றாவதறிந்திலார்
அன்பும் சிவமும் ஒன்றாவதறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே "

என்ற திருமூலர் திருமந்திரத்தின் நிறைந்த பொருளை விளக்கும் உதாரணமாக நீ நிற்கின்றாய்.

77. வளமதி - வளப்பம் பொருந்திய மதியை யுடைய
தாய்நீசொல் வழி – தாயே நீ உய்வழி கூறுவாயாக.

78. நிற்கூட்டி – நின்னைத் தன்வயின் அழைத்து
வேட்ப – வேட்டுநிற்கும்படியாக.

பழிகாட்டும் வன்குலத்தில் நீபிறந்திருந்தாலும், இறைவன் நின் விழியை வேட்டகாரணத்தாலே நீ உயர்ந்த குலத்தவனைப் போலப் பொலிந்தனை.

நீயுலகம் எல்லாம் இரப்பினும் நின்னுடைய
தீய அரவொழியச் செல்கண்டாய்—தூய
அரிவையர்கள் அஞ்சாவா(று) என்றுய்கா ரைக்கால்
பெரியதொரு தாயாம்சீர்ப் பேய்! 79

பேயுடனே ஆடும் பிரானவனைக் கண்டவுடன்
நாயுடனே நல்வேட்டை நாடியநீ—தாயுடனே
சேயடைந்த தன்மையிலே சேர்ந்தரனைக் கண்ணப்ப!
நீயடைந்தாய் மேலாம் நிலை. 80

நிலையாக நள்ளிரவில் நீகாட்டில் ஆடும்
தலையாய அத்தலத்தைத் தான்பொற்—சிலையானே
காட்டுதியோ? என்றுரைத்த காரைக்கால் அம்மைநீ
வீட்டுதியோ என்றன் வினை? 81

வினைப்பாரம் கீழிறங்க வெற்பதனின் உச்சி
தனைச்சாரத் தத்துவங்கள் தாண்டி—முனைப்போய்ந்தும்
ஆணைச் சிவஞ்சார்ந்திட்(டு) அன்புருவாய்க் கண்ணப்ப!
பூணப்பெற் றுயிறைதாட் பூ. 82

---

79. இறைவனே, நீ பலியேற்கச் செல்லும் பொழுது பிச்சையிடவரும் பெண்கள் நின்னைக்கண்டு அஞ்சாமல் இருக்கும் வண்ணம் நீ உன் ஆபரணமாகிய பாம்புகளை நீக்கிவிட்டுச் செல்வாயாக என்று காரைக்காலம்மை நயம்படக் கூறுகின்றார்.

81. என்வினை வீட்டுதியோ – என் வினைகளைக் கடிவாயோ?

82. வினைப்பாரம் கீழிறங்க - வினையின் பாரம் கழிந்தொழிய. தத்துவங்கள் தாண்டி – முப்பத்தாறு தத்துவங்களாகிய படிகளைக் கடந்து.

ஆணைச்சிவம் சார்ந்திட்டு—அத்தத்துவங் கட்கப்பாலுள்ள ஆணையாகிய சிவனையடைந்து.

முனைப்போய்ந்தும் - நான் என்னும் தன்முனைப்பு அழிந்தும். இறைதாட்பூ – இறைவனின் திருவடித்தாமரை.

“நாணனும் அன்பும் முன்பு நளிர்வரை ஏறத் தாமும்
பேணுதத்துவங்களென்னும் பெருகு சோபானமேறி
ஆணையாம் சிவத்தைச் சார அணைபவர் போல ஐயர்
நீணிலை மலையை யேறி நேர்படச் செல்லும் போது”

என்ற சேக்கிழார் பெருமான் திருவாக்கை நோக்குக.

பூணுகத் தாற்பொலிந்து பொங்கழல்சேர் நஞ்சுமிழும்
நீணுகத் தானை நினைந்துள்ளம்—கோணுமல்
நற்சேமம் செய்யுமென நம்காரைக் கால்தாய்நீ
சொற்சேமம் தந்தாய் துணை. 83

துணையில்லாய் வெவ்விலங்கு தோன்றுங்கால் காக்கக்
கணையில்லாய்; ஊனளிக்கக் காதற்—பிணையில்லாய்
ஆவல் பிரானேஎன், றத்தனைத்தான் கண்ணப்ப!
காவல் புரிந்தனையக் கால். 84

காலைபோல் மேனி; கடும்பகல்போல் வெண்ணீறு;
மாலைபோல் வேணியது; மன்னிருள்போல்—கோலமிகு
கண்டம்இறைக்(கு) என்றுரைத்த காரைக்கால் அம்மைநீ
அண்டமுறத் தானிமிர்ந்தாய் அன்று. 85

அன்றொருகண் மீண்டும் அரனடைதல் கண்டுவகைக்
குன்றெனவே ஓங்குதோள் கொட்டிமுனம்—நன்றுநடம்
மால்வரைமேல் ஆடிமகிழ் கண்ணப்ப! மற்றடியேன்
பால்வரையா துன்னருளே பண். 86

---

83. பூணுகத்தாற்பொலிந்து - பூணப்படும் நாகத்தினுல் விளங்கி.
நீணுகத்தானை – நீண்ட நாகத்தை அணிந்தவனை.
நற்சேமம் செய்யும் – நன்கு சேமித்துவைப்பீராக.
சொற்சேமம் - சொல்லாகிய க்ஷேமத்தை, நன்மையை.
தந்தாய் துணை - துணையாகத் தந்தாய்.

84. கணை - அம்பு.
காதற்பிணை - மனைவி, துணைவி,
ஆவல்பிரானே - ஆசைக்குரிய பெருமானே.

86. அரனது கண் ஒன்றில் தமது கண்ணை அப்பிய கண்ணப்பர் அந்தக் கண்ணின் இரத்தம் நின்றதைக் கண்டவுடன் தமது தோள்களைக் கொட்டி ஆர்ப்பரித்து ஆனந்தக் கூத்தாடினர்.

“ நின்றசெங் குருதிகண்டார் நிலத்தினின் றேறப்பாய்ந்தார்
குன்றென வளர்ந்ததோள்கள் கொட்டினர் கூத்தும்ஆடி
நன்றுநான் செய்தஇந்த மதிஎன நகையும்தோன்ற
ஒன்றிய களிப்பினுலே உன்மத்தர் போலமிக்கார் ”

— பெரியபுராணம்

மால்வரைமேல் - பெரியகாளத்தி மலைமேல்; தேவுமாலாகிய மலைமீது எனினும் பொருந்தும்.

மற்றடியேன்பால் உன்னருளை வரையாது செய்வாயாக.

பண்புணர மாட்டேனே ஆயிடினும் பார்ப்பதியாம்
பெண்புணரும் பங்கிலோ பீடுறுமால்—நண்பொடமர்
பங்கினிலோ நீறணிவாய் பாங்காசொல் என்பார்யார்
பொங்கொளிகா ரைக்கால்தாய் போல். 87

போலிக் கடையனெனைப் புன்மைக் கடல்தூக்கிப்
பாலித் தருள்புரிவார் பாரிலின்றி—ஓலிட்டேன்;
கண்ணுதலார்க் கேஉதவும் கண்ணப்ப! நின்கழலே
எண்ணுதலால் இல்லேன் இடர். 88

இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
சுடர்உருவார் தம்மையே சொல்லித்—தொடரும்காண்
என்னெஞ்சென் றுய்காரைக் காலம்மே! ஏன்றருளாய்
வன்னெஞ்சக் கள்வனெனை வந்து. 89

வந்தடைந்து காளத்தி மாமலைமேல் வாழ்வாரைப்
பந்தமுறக் கட்டியதோர் பாங்காலோ—முந்தியுறும்
தொண்டனுக்கு நாணன்பேர் தோன்றியதே கண்ணப்ப!
விண்டனக்கும் மிக்காய் விளம்பு. 90

விளம்பினைமுன் மூத்த திருப்பதிகம், பத்தி
வளம்பயிலும் செந்தமிழால் வையத்(து)—உளம்பயில
ஆலங்காட் டப்பனுக்கே ஆளாம்கா ரைக்கால்தாய்!
கோலங்காட் டும்பதமே கொண்டு. 91

---

90. நாணன் என்பது நாண் - கயிறு என்னும் பகுதியடியிற் பிறந்த சொல்லாகக் கொண்டால் பொருந்தும். ஏனெனில், நாணன் தான் முதலில் கண்ணப்பருக்குக் குடுமித்தேவரைக் காட்டி அவரை இவருடன் கட்டினவன் என்பது புலப்படுகிறது.

எனவே, இறைவனோடு கண்ணப்பரைக் கட்டினவன் என்பதனாலோ நாணன் (கயிறு போன்றவன்) என்ற பெயர் உண்டாயிற்று என்னும் நயம் தோன்ற ஒருவினா ஈண்டு எழுப்பப்பெற்றுள்ளது.

விண்டனக்கும் - விண் தனக்கும் - விண்ணுலகினுக்கும்.

91. மூத்ததிருப்பதிகம் - காரைக்கால் அம்மையால் இயற்றப் பெற்ற மூத்த திருப்பதிகம் என்னும் நூல். இது 11 பாடல்களைக் கொண்டது. இத்துடன் அவர் அருளிய திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தையும் நோக்குக. அவரது ஏனைய நூல்கள் திருஇரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி என்பவையாகும்.

கொண்டேன் பிராணுகக் கொண்டதுமே இன்புற்றேன்
உண்டே எனக்கரிய தோர்வைப்பே—கண்டேனே
என்றுவந்து காரைக்கால் அம்மை இயம்புதமிழ்
ஒன்றுவந்து கற்றேன் உளம். 92

கற்றதனுல் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅரெனின் நன்கென்று—முற்றறிவின்
நாதன் மொழிவிளக்கி ஞன்கல்வி ஏதொன்றும்
ஓதலிலாக் கண்ணப்பன் உய்ந்து. 93

'உய்யச் சிலபலிதேர்ந் தூர்திரியேல் உத்தமனே
வையத் திழுக்கென்று' வானவரே—ஐயனைமுன்
சென்று விலக்காரேல் செய்வதெனே யாம்என்ருய்
அன்றுகா ரைக்கால்தாய்! ஆர்ந்து. 94

ஆர்ந்தசிவன் தூக்கியகால் நோவஞ்சி அம்மாறன்
சோர்ந்தழுது மாளத் துணிந்ததுவோ? சேர்ந்திறைவன்
கண்ணிற்புண் கண்ணப்பன் கண்டழுதிட் டப்பியதோ?
மண்ணிற்சீர் மிக்கசெயல் மன்! 95

---

93. "கற்றதனுல் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்ருள் தொழாஅ ரெனின்"

என்னும் திருவள்ளுவர் வாக்கைக் கல்வி பயிலாத கண்ணப்பர்தாம் விளக்கிக் காட்டினுர் என்பது பொருள்.

கல்விக்கழகு கடவுளையுணர்தல் என்பது வள்ளுவர் வாக்கு. அதன்படி, கடவுளையுணர்ந்தவன் கல்வியாளன் ஆவான். கண்ணப்பர் கடவுளையுணர்ந்தமை கண்கூடு. ஆதலால், கண்ணப்பர் கல்வியாளராகிருர். இக்காரணம் பற்றித்தான் "கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்" என்று சுந்தரமூர்த்திப் பெருமான் கண்ணப்பரை வருணிக்கிருர்.

முற்றறிவின் நாதன் - திருவள்ளுவ நாயனுர்.

95. நீண்டகாலமாக ஒருகாலைத் தூக்கியும் மற்ருெருகாலை யூன்றியும் நின்று ஆடியபடியிருக்கும் நடராஜப்பெருமானின் கால் வலியை நினைத்துத் தன் உள்ளம் புழுங்கிக் கவன்ற விக்கிரமபாண்டிய மன்னன், அப்பெருமான் தமது கால்களை மாற்றியூன்றியும் தூக்கியும் நின்று ஆடினுல் ஒழியத் தான் தன் உயிரை நீத்துவிடுவேன் என்று வாள்மீது பாயப்போந்தான். அச்சமயம் அவனுக்காகப் பரிந்து வெள்ளியம்பல நடராஜர் தமது இடதுகாலையூன்றி வலதுகாலை மாற்றித் தூக்கி நின்ருர். இவ்வரலாற்றைத் திருவிளையாடல் புராணத்தில் காண்க.

மன்னுவிடம் உண்டவாய் மாருதுன் கண்டமதில்
துன்னுமிருள் தேங்குவதேன் சொல்லென்ன—முன்னரனே
நீவினவும் நீர்மைதனை நீள்காரைக் காலம்மே!
மேவிநனி ஓர்ந்தேன் மிக. 96

மிகுந்தேவு மாலுருக்கொள் மேன்மையுடன் நீயோர்
தகுந்தேவென் றிவ்வுலகோர் சாற்றப்—புகுந்தன்று
கண்ணிடந்தாய் நாதனுக்கா கண்ணப்ப! நின்னுருவென்
கண்ணிடந்தான் காட்டாயிக் கால். 97

காலமெலாம் நீயாடும் காலடியிற் சார்ந்துபணிந்(து)
ஓலமிட மாளா உயர்காதல்—சாலவருள்
மெய்யறவா என்றரன்பால் வேண்டியகா ரைக்கால்தாய்
உய்வுறவாம் நாயடியேற் குள். 98

உண்மகிழ்ந்தே அப்பாவென் ருேரிறைவன் ஓதிடவே
கண்மகிழ்ந்தே அப்பியசீர்க் கண்ணப்பன்—பண்பதனைப்
போற்றிடுவார் பூங்கழலைப் போற்றிப் புரிந்தேவல்
சாற்றிடுவேன் சந்தத் தமிழ். 99

இந்தப் பாண்டியனின் அன்பும் செயலும் பெரியனவா அல்லது காளத்தியப்பர் கண்ணைக் காக்கத் தம் கண்ணை இடந்தப்பிய கண்ணப்பர் அன்பும் செயலும் பெரியனவா என்பதொரு நயமான ஐயப்பாடு.

96. விடத்தை யுண்டது உனது வாயாகவும், அது கறுப்புநிறம் பெருமல் நினது கண்டமானது கறுத்திருப்பதன் காரணம் என்ன என்று காரைக்கால் அம்மையார் நயம்பட வினவுகிருர்.

97. மிகுந்தேவுமாலுருக்கொள் - மிகுந்த கடவுட்பித்து நிறைந்த உருவினை யுடைய.

தகுந்தேவு - தகுதியுடைய தேவன்.

98. "இன்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி அறவாநீ யாடும்
போதுன் அடியின் கீழ் இருக்க என்ருர்"
— பெரியபுராணம்

99. "நில்லுகண்ணப்ப நில்லுகண்ணப்ப என்
அன்புடைத் தோன்றல் நில்லுகண்ணப்ப என்று
இன்னுரை யதனெடு........."
— திருக்கண்ணப்ப தேவர் திருமறம்

இறைவனுல் கண்ணப்பர் "அப்பா" என்று அழைக்கப் பட்டமை குறிப்பு.

தமிழ்தேங்கு பாடலொலி தண்கயிலை சார்ந்த
குமிழ்தேங்கு புன்முறுவற் கோன்றான்—அமிழ்தோங்கும்
ஒருரையால் வாழ்த்தும் உயர்காரைக் காலம்மை
சீருரைநூல் அன்றோ திரு! 100

அம்மைபாதி அப்பன்பாதி அந்தாதி

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்

---

100. தமிழ்ப் பாடல் ஒலி செய்கின்ற கயிலை என்பது பொருள். —"ஒலிதரு கயிலை உயர் கிழவோனே"—திருவாசகம்.

குமிழ் தேங்கு புன்முறுவல் – "கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்" — திருநாவுக்கரசர்.

அமிழ்தோங்கும் ஒருரையால் வாழ்த்தும்—அமுதத்தின் இனிமை கூடிய 'அம்மையே' என்னும் ஒரு மொழியால் அழைக்கும்.

காரைக்காலம்மையின் சிறப்பு மொழி சேர்ந்த நூலே அழகும் மங்கலமும் உடையது ஆகும்.

குறிப்பு: இந்நூலில் காரைக்கால் அம்மையைப் பற்றிய வெண்பாக்களில் ஏறக்குறைய எல்லாவற்றிலும் உள்ள முதல் இரண்டு அடிகள் அவ்வம்மையாரின் நூலாகிய **அற்புதத் திருவந்தாதியில் உள்ள** அடிகளேயாகும் என்பது ஈண்டுக் குறிப்பிடத் தகுவதாகும். அவரது மணி போன்ற வாக்கையெல்லாம் பொன்னேபோல் போற்றிவைப்பது நமது இன்பக் கடமை எனக் கருதியே இம்முறை கையாளப் பெற்றுள்ளது.

உயர்திரு. காராவேலன் அவர்கள்

இயற்றியுள்ள

காரைக்காலம்மையின் திருவாலங்காடு மூத்ததிருப்பதிகத்தின்

பிரஞ்சு மொழிபெயர்ப்பு.

TIROU-ALANKADOU

(*C'est un village oú il existe un temple célébre de Siva*)

Les seins ridés, le corps èmacié,
Les yeux en boule, les dents blanches, le ventre creux,
Les cheveux roux, les canines allongées,
Les chevilles saillantes, les jambes longues, une femelle du diable
Assise, crie et vocifère au champ crèmatoire,
Là, la chevelure abondante jetée aux huit points cardinaux,
Le corps rafraîchi, danse, sur le feu, notre
Pére dont la demeure est Tirouvâlankádou ; 1

*

*   *

Une diablesse, les pieds étendus entre les touffes d'euphorbes,
Tire un bout de tison, le réduit en poudre, s'en
Marque le corps. Ricanant
De fureur et de crainte á la vue d'une bête,
Elle saute et, au feu du bûcher consumant un cadavre,
Se brūle. Alors entiérement hors d'elle, elle ramasse
De la poussiéire et éteint sa brûlure. Lá se tient et danse notre
Père dont la demeure est Tirouvâlankâdou. 2

*

*   *

Le mimosa s'épanouit en large bouquet. Ses fruits blancs et secs bruissent
Aveuglante et dense est l'obscurité au milieu de la nuit.
Le gros hibou et la poule á tête d'homme chantent. La chouette
Sur les branches sautille. Le mimosa
Grimpant et les buissons d'euphorbes étendent leurs ombres.
Les bûches jonchent le champ crématoire.
Lá. le corps rafraîchi, danse, sur le feu, notre
Père dont la demeure est Tirouvâlankâdou. 3

*

*   *

Les renards mangent le riz trouvé
Dans les rigoles du sacrifice.—“ que n'avons-nous vu
Cela plus tôt ” disent, irrités, les diables
Qui, battant des mains, accourent au champ crématoire.
Lá est le théâtre où, pliant latéralement les jambes
Ou touchant la voûte azurée du pied-levé vivement
Lors de la compétition,-danse le “ oullalam ” notre
Père dont la demeure est Tirouvâlankâdou. 4

*
* *

Une diablesse avale la graisse coulant du bûcher.
Elle se pare d'un collier de crânes blanchis.
Essuie la poussière de son enfant appelé
Du nom de Kâli et élevè avec tendresse,
Lui donne le sein et s'en va.
L'enfant, ne voyant pas revenir sa mère,
Pleure et s'endort au champ crématoire. Lá danse le
Père dont la demeure est Tirouvâlankâdou. 5

*
* *

Les diables aux pieds secs, glissants et armés de longs ongles
Les milans, les gros hiboux, les perdrix, les chouettes
Pondent ou mettent bas au champ crématoire,
Les gros hiboux, les diables, les renards, les diablesses y dansent.
Là, retournant les cadavres,
Brisés et jetés au bûcher,
Et sautant de côté danse notre
Père dont la demeure est Tirouvâlankâdou. 6

*
* *

Les yeux tournoyant et jetant des flammes, le feu à la bouche, les diables
Se rassemblent, s'agitent et dansent en se frappant les côtés avec les coudes
Les diablesses retirent les cadavres se consumant au feu,
En mangent la chair et dansent au champ crématoire.
La, l'anneau de bravoure et l'anneau de femme tintinnabulant,
Le pied levé, au son des cymbales,
Au bruissement de la chevelure couleur de feu, danse le
Père dont la demeure est Tirouvâlankâdou. 7

*
* *

O-,12 N B54.A
N54

Par la pérégrination à travers villes et contrées
Et par la voie du devoir était devenu excellent
Ce vieillard dont le cadavre enroulé gît là
Où le cercle des démons accourus grossit sans cesse.
Et la forêt et la mer et la montagne et la terre
Et le ciel tournent en rond alors que, le feu à la main,
Danse, paré de serpents, le danseur de la danse " Pouyangane " notre
Père dont la demeure est Tirouvâlankâdou. 8

*

* *

Avec l'accompagnement des chants où s'harmonisent les notes
" Toutam, Kaïkkillai, Vilari, Târam, Oujai, Ili Ossai "
Et d'un orchestre varié et nombreux. " Satchri," conques,
" Takkï, Tagounidam", timbales,
Cymbales, luths, tambourins,
" Karadikai, Vanekaï, Tamarougam" à peau mince,
" Koudamouja " et "Mondaï", danse notre
Père dont la demeure est Tirouvâlankâdou. 9

*

* *

L'intelligence obcurcie, la mémoire affaiblie,
L'homme meurt. On le porte au champ crématoire.
Au carrefour, on lui rend les honneurs prescrits ;
Celui qui en est digne allume le bûcher. A sa lueur,
Alors que les sons des tambours des dieux antiques
Se répondent aux points cardinaux et que tintinnabule continuellement
l'anneau de femme
Dans la grande danse du soir notre
Pére dont la demeure est Tirouvâlankâdou. 10

*

* *

Il n'a pas de comparaison ; les diables s'assemblent,
Se battent entre eux et leur nombre grossit.
Ils dansent en rond. La perdrix chante.
Le renard de son cri les accompagne comme un luth.
A Tirouvâlankâdou dont le père est l'honneur
La diablesse de Kâraikâl aux cheveux hérissés célèbre ses pieds
Dans ces strophes du beau tamoul. Celui qui les récite
Parviendra aux pieds de Sivâ et sera heureux. 11

[Cette allocution a été prononcée par Me Léon Saint Jean, (Karavelane), secrétaire de l' Institut Français d' Indianisme à Karikal lors de la réception organisée en l' honneur de M. et Mme Baron le 22 avril 1946.]

திருவாசகமணி

இயற்றியுள்ள

ஏனைய நூல்கள்

ஆங்கிலம்

1.	Saiva Siddhantam — (A Short Survey)	விலை ரூபாய் ஒன்று
2.	South Indian Celebrities — Vol. I & II	பிரதிகள் இல்லை
3.	Tiruvachakam (English Translation)	அச்சில்

தமிழ்

இயல்

4.	வடதிருமுல்லைவாயில் திருப்பதிகம்	விலை அணு இரண்டு
5.	வடபழநித் திருப்பதிகம்	,, ,, ,,
6.	கள்ளழகர் திருப்பதிகம்	,, ,, ,,
7.	ஆதி குமாருருபரர் திருப்பதிகம்	,, ,, நான்கு
8.	மாணிக்கவாசகர் மாலை	பிரதிகள் இல்லை
9.	திருப்போரூர்ச் சதகம்	விலை அணு நான்கு
10.	திருப்பழநி வெண்பா அந்தாதி	,, ,, ஆறு
11.	திருநாவுக்கரசர் பதிற்றுப்பத்தந்தாதி	,, ,, ஆறு
12.	ஈங்கோய்மலை அந்தாதி	,, ,, எட்டு
13.	திருஞானசம்பந்தர் திருவந்தாதி	அச்சில்
14.	திருத்தொண்டர் முதுமொழி வெண்பா	,,

இசை

15.	கீதத்தமிழ்	விலை ரூபாய் மூன்று
16.	திருத்தொண்டர் கீதம்	தருமை ஆதீனம்
17.	சிவாலய கீதம்	அச்சில்

கிடைக்கும் இடம்: திருவாசகமணி

C/O. யுனைடெட் பிரிண்டர்ஸ்,

தெப்பக்குளம் போஸ்டு, திருச்சி.

திருச்சிராப்பள்ளி யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், திருச்சி.